
# மண்

2015

இதழ் 171

வைகாசி / ஆனி
May / June




வெள்ளிவிழா
02.05.2015
Skantha

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவி நிதி

முகவரி: V. Sivarajah
Am Windhövel 18A
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# எங்கள் கருத்து

புலம்பெயர் வாழ் தமிழர்கள் தம் தாய் நிலத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக வகைப்படுத்தக்கூடியதாக உள்ளன. இதனை அரசியல் ரீதியாகவும் பொருளாதாரம் என அணுகவேண்டும். சமூகம் என்ற பிரிவினுள் கல்வி, உயர்கல்வி, கலை கலாசாரம், சமயம், சுகவாழ்வு, வேலைவாய்ப்பு போன்றனவாகப் பார்க்கப்படலாம்.புலம்பெயர் வாழ் தமிழர்கள் தாம் வாழும் நாட்டு அரசியலில் செல்வாக்கு செலுத்துதலின் ஊடாக அந்த நாட்டை எமது அரசியல் பிரச்சனைகளில் ஈடுபட தாண்டமுடியும். அந்நாடுகளின் உள்ளூர் அரசியலிலும் நாடாளுமன்ற அரசியலிலும் ஈடுபடுவதன் மூலம் எமது பிரச்சனைகளை சர்வதேச மயப்படுத்துவதோடு நாம் வாழும் நாட்டின் மக்களுக்கும் எமது நியாயப்பாட்டை உணர்த்தமுடியும்.

இலங்கையில் சென்ற ஆட்சியின் போது இறுக்கமாக இருந்தாலும் புதிய ஆட்சி மாற்றத்தில் ஒரு விட்டுக்கொடுப்பு தெரிகிறது. எனவே இதனைப்பயன்படுத்தி இரு நாட்டு குடியுரிமையைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். இதனால் எமது தாயகத்தில் குடித்தொகை எண்ணிக்கை, வாக்குப்பலம் என்பன அதிகரிக்கும். புலம்பெயர் தமிழர்கள் விவசாய பொருளாதார அபிவிருத்தியிலும், கைத்தொழில் அபிவிருத்தியிலும், வர்த்தக அபிவிருத்தியிலும், கல்வி வளர்ச்சியிலும், மருத்துவ துறைகளில் மேம்பாட்டுக்கும் முதலீடுகளை செய்யமுடியும். தென் இலங்கை முதலீட்டாளர்களுடன் இணைந்தும் முதலீடு செய்யப்படலாம். மத்திய அரசுடன் இணைந்தும், மாகாண உள்ளூராட்சி சபையுடன் இணைந்தும் இம்முதலீடுகள் செய்யப்படலாம்.

சமூக மேம்பாடு என்று சொல்லும்போது கல்வித்துறையில் பெருமளவு உதவலாம். பாடசாலைக் கல்லூரி மட்டங்களில் புலம்பெயர்ந்து வாழ்வோர் பெருமளவு உதவி செய்கின்ற போதிலும் சிறு பாடசாலைகள் கவனிக்கப்படுவதில்லை. மேலும் இங்குள்ள பிள்ளைகளின் மேம்பாட்டுக்காக தகவல் தொழில்நுட்ப அறிவு, ஆங்கிலம் போன்றவற்றை கிராம மட்டங்களிலும் கற்பிப்பதற்கு உதவிகள் செய்யலாம். உயர் கல்வி கற்று பல்கலைக்கழகம் செல்ல முடியாதுள்ளோருக்கு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் இடம் பெற்று கொடுப்பதுடன் வசதி குறைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசிலையும் வழங்கமுடியும். மருத்துவ துறையைப் பொறுத்த வரையில் தனியார் மருத்துவமனைகள் உருவாக்கலாம். இம் மருத்துவ மனைகளில்

புலம்பெயர் வாழ் மருத்துவர்கள் தமது விடுமுறை காலத்துக்குச் சென்று உதவலாம். முக்கியமாக நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களின் உதவிகள் பெருமளவு அங்கு தேவைப்படுகின்றன.

எமது தாய்நிலத்தின் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் புலம்பெயர் தமிழர்கள் பெருமளவு உதவி செய்யலாம். நமது கடல் பிராந்தியங்களில் தாவரங்களின் சூழலைப் பேணுவதன் மூலம் சுற்றுலாவுக்கான அழகைப் பேணுவதோடு அதனை பறவைகள் சரணாலயமாக மாற்றுவதற்கும் முயற்சிக்கலாம். கிராமங்கள் தோறும் நூல் நிலையங்களையும், சிறுவர் பூங்காக்களையும் அமைத்து வழங்கலாம். ஏலவே உள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்றவற்றிற்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் இதனை அபிவிருத்தி செய்யலாம். கூட்டுறவு அடிப்படையில் விவசாயப் பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள், மீன்பிடித் தொழிலுக்கான பண்ணைகள் என்பவற்றை உருவாக்கி அங்கு பலருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கவும் வாய்ப்புகள் உள்ளன. முக்கியமாக இவற்றில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகளவு வழங்கமுடியும்.

புலம்பெயர் தமிழர்கள் பெருமளவு வலைத்தளங்களை உருவாக்கி நடத்தி வருகின்ற போதிலும் அவை பெருமளவு தமிழர் தம் அரசியல் சார்ந்ததாகவே விளங்குகின்றன. பெருமளவு வலைத்தளங்கள் அறிவு ரீதியாக பிரச்சினைகளை அணுகாது உணர்வு ரீதியாகவே அணுகுவதை அவதானிக்கமுடிகிறது புலம்பெயர் வாழ் மக்கள் ஒவ்வொருவரும் தன் தாய் மண்ணின் முன்னேற்றத்திற்கு ஒரு தர்மகாரியம் செய்யவேண்டும் என தீர்மானிப்பார்களே ஆயின் எமது தாய் நிலம் வளம்பெற அவர்களின் அந்த தீர்மானமே போதுமானதாக இருக்கும்.சமீப காலங்களின் புலம்பெயர் தமிழர்களால் பெருமளவுக்கு கோயில்கள் அழகான முறையில் கோபுர வசதியுடன் கட்டப்பட்டுவந்தாலும் அங்கு கும்பிடுவதற்கு ஆட்கள் இல்லை என்பதும் உண்மைதான். இந்தக் கோவில்களுக்குக்கொட்டப்படும் நிதிஉதவிகளை பொருளாதார, கல்வி, சமூக மேம்பாட்டுக்காகவும் இவர்கள் செலவழிப்பார்களானால் எமது பிரதேசத்தில் பல இன்னல்கள் விரைவில் தீரும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.......

ஆசிரியர்

# ஆத்திசூடி விளக்கம்!...




## கீழ்மை அகற்று:-

பள்ளிக்கூடத்தில் பல மாணவர்களுடன் பழகுகிறாய். அண்டை அயலிலும் பலரோடு பழக்கம் கொள்ள நேரிடும். நீ பழகும் எல்லாருமே நல்லவர்கள் என்று சொல்லிவிட முடியாது. சிலர் சிறப்பான குண நலன்களையும் செயல்களையும் உடையவர்களாக இருப்பார்கள். வேறு சிலர் கெட்ட குணங்களும் கீழான செயல்களும் உடையவர்களாக இருப்பார்கள். சில நாட் பழக்கத்திலேயே இதை நீ உணர்ந்துகொள்வாய். ஆகவே கீழ் மகனாகிய அவர்களுடன் நட்புக்கொள்ளாதே. விலகிவிடு. இவர்கள் சேர்க்கையினால் நீயும் கெட்டுப் போவாய் என்று உனக்கு அற உரை கூறுகின்றார் ஔவைப்பாட்டி. கீழ்மை அகற்று என்று. கீழ்மை என்றால் கீழான-இழிவான குணம் என்று பொருள். உன்னிடமுள்ள இழிவான குணம், செயல்களை நீக்கு என்றும் பொருள் கொள்ளலாம்.

## குணமது கைவிடேல்:-

உன் உடல் நிலை பாதிக்கப்படுகிறது. டாக்டரிடம் போகிறாய். அவர் உன் நோய்க்கு மருந்து தருகின்றார். இரண்டுவேளை சாப்பிட்டதுமே உடல்நிலை சரியாகி விடுகின்றது. நீ என்ன செய்ய வேண்டும். நோய் முழுவதும் குணமாகி நீ பழைய நிலையை அடையும்வரை அம்மருந்தைக் கைவிடக்கூடாது. இதேபோலத்தான் உன் வாழ்க்கையில் உனக்குப் பெயரும், புகழும், பொருளும் தரக்கூடிய நல்ல செயல்களை, எண்ணங்களைக் கைவிடக்கூடாது. அப்போதுதான் நோயற்ற உடலைப் போல புகழ்பெற்ற வாழ்வைப் பெறலாம். இதைத்தான் ஆத்திசூடி ஆசிரியர் குணமது கைவிடேல் என்று போதிக்கிறார். குணம்-நன்மை, நல்லது தரும் எதையும் விட்டுவிடக்கூடாது.

# தாய்த்திருநாடு...

எனது தாய்த் திருநாடுஇலங்கை ஆகும். இது ஒரு தீவாகும் ,இதுஇந்து சமுத்திரத்தின் மத்திதியில் அமைந்துள்ளது.இங்கு மூன்றுஇன மக்கள் வாழ்கின்றனர்.அவர்கள் தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் ஆவார்கள். முற்காலத்தில்இலங்கை,இலங்காபுரி, லங்கா, நாகதீபம், லங்காதுவீபம் உட்பட மற்றும் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. அதன் அமைவின் காரணமாக "இந்து சமுத்திரத்தின் நித்திலம்" என்ற புகழும்இதற்கு உண்டு.

இலங்கை ஒன்பது அரசியல் மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவைஇரண்டு அல்லது மேற்பட்ட நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியன. ஒவ்வொரு மாகாணமும் மக்களால் தெரிவு செய்யப்பட மாகாண சபையால் ஆளப்படுகிறது.இலங்கை 25 நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் நியமிக்கப்படும் அரசாங்க அதிபரால் நிர்வகிக்கப் படுகிறது. அரசாங்க அதிபரின் கீழ் நியமிக்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளாக ஒரு மாவட்டம் பிரிக்கப் பட்டுள்ளது. மிகக் கிழ்நிலை நிர்வாகப் பிரிவுகளாக கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன.

புராதன காலந்தொட்டே நவரத்தினக்கள். யானைத்தந்தம், முத்துக்கள் போன்ற பொருட்களுக்கு புகழ்பெற்றஇலங்கை, குடியேற்ற காலத்தில் கறுவா, தேயிலை,இறப்பர், தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களுக்குப் பெயர்பெற்று விளங்கியது. இலங்கைக்கு 1948ல் சுதந்திரம் கிடைத்தது.இலங்கை பல்லின மக்கள் ஒன்றாக வாழும் நாடாகும்.இவர்கள் பல சமயங்களை பின்பற்றுவதுடன் தனித்துவமான கலாசாரங்களையும் பேணி வருகின்றனர். இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கிழக்குக் கரைக்கு அப்பால்இந்து சமுத்திரத்தில் கிட்டத்தட்ட 20 மில்லியன் மக்கள் வாழும் ஒரு தீவு நாடு ஆகும். இலங்கையின் ஆவணப்படுத்தப் பட்ட வரலாறு மூவாயிரம் ஆண்டுகளைக் கொண்டது. இலங்கை அதிபர் முறை மூலம் குடியரசு மற்றும் ஒற்றையாட்சி அரசால் ஆளப்படும் நாடாகும்.இலங்கையின் நிர்வாகத் தலை நகராக அண்மையில் உள்ள ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டையை ஆக்கும் பொருட்டு புதிய பாராளுமன்றக் கட்டிடம் அங்கே கட்டப்பட்டு, கொழும்பு நகரில் உள்ள ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை தலைநகராக அமைந்துள்ளது.

செல்வி கஜந்தா நவரட்ணராஜா
ஜேர்மனி.

# தனிநாயகம் அடிகளார்

தனிநாயகம் அடிகளார் ஊர்காவற்றுரை கரம்பன் என்னும் கிராமத்தில் 1913 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் சப்த தீவுகளில் ஒன்றான நெடுந்தீவைச் சேர்ந்தவர். கென்றி ஸ்தனிஸ்லால் கணபதிப்பிள்ளை என்னும் பெயரைக் கொண்டவர். தாயார் செசில் இராசம்மா வஸ்தியாம்பிள்ளை. பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சேவியர் என்பதாகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.சம்பத்தரிசியார் கல்லூரியில் கற்றார். தொடர்ந்து கொழும்பு புனித பெர்னாந்து குருத்துவக் கல்லூரியில் கற்று தமது 21 ஆவது வயதில் 1934 ஆம் ஆண்டு ரோமாபுரி உர்பன பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்தார். 1939 இல் இவர் இறையியலில் கலாநிதி'பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

ரோமாபுரியில் உர்பன் பல்கலைக்கழகத்தில் ஐந்து ஆண்டுகள் கல்வி கற்ற பொழுது 43 நாடுகளைச் சேர்ந்த 250 மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்றதன் பயனாக இவருக்கு பரந்த மனப்பான்மை உண்டாயிற்று. வெவ்வேறு நாடுகளைப் பற்றியும் இலக்கியங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள பல்கலைக்கழகம் அரியதொரு வாய்ப்பினை இவருக்கு அளித்தது. தனிநாயகம் அடிகளார் இளமையில் தானாக சமயப் பணியினை ஏற்கவில்லை. இவரது தாயார் மரணப் படுக்கையில் இருந்த பொழுது அவரது விருப்பத்திற்கு இணங்கவே இவர் அதனை ஏற்றுக்கொண்டார். இவர் பாடசாலையில் கல்வி கற்கும் பொழுது லியோ டால்ஸ்டாய் எழுதிய 'புத்துயிர்ப்பு' என்ற நாலைப் படித்தார். பின்பே இறைபணியில் தன்னை முழுமனதுடன் ஈடுபடுத்திக்கொண்டார். இவர் வேறுபட்ட சூழலில் வாழ்ந்ததனால் நற்குண நற்செயல்களைக் கற்றுக்கொண்டார். பல அனுபவங்கள் பெற்றதன் விளைவாக பரந்த நோக்கு உடையவராகத் திகழ்ந்தார்.

கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர் இவர் இந்தியாவுக்கு வந்து நெல்லை மாவட்டத்திலுள்ள வடக்கன் குளப் பிரதேசத்தில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார்.அங்கு பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயரிடம் நான்கு வருடங்கள் தமிழ் கற்றார். அப்பொழுது தான் ஒரு தமிழ் பெயரைச் சூட்டிக்கொள்வது நல்லதென்று 'ரோச் ஆண்டகை' கேட்டுக்கொண்டதற் கிணங்க தனிநாயகம் முதலி பரம்பரையில் தான் தோன்றியவர் என்பதை அறிந்து தனக்கு சேவியர் ஸ்தனிஸ்லால் தனிநாயகம் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார

1945 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுநிலை மாணவனாகச் சேர்ந்தார். தமிழ்த்துறைத் தலைவராக த.பொ.மீனாட்சிசுந்தரனார் பணியாற்றியபொழுது அவரிடம் தமிழ் கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. அடிகளார் தமிழ் பண்பாட்டுக்கழகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆகிய அமைப்புக்களை நிறுவி முதன்மை ஆசிரியராக இருந்து "Tamil culture" என்ற ஆங்கில முத்திங்கள் ஏட்டினை நடாத்தி வந்தார். உலகளாவிய ரீதியில் பல ஆய்வுகளைச் செய்தார். 17 ஆங்கில புலமையாளர்களுக்கும் 20 தமிழ் புலமையாளர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். தன் இறுதி மூச்சுவரை தமிழுக்குத் தொண்டாற்றிய அடிகளார் 1980 ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

செல்வி தீபிகா. சற்குணம்
Stuttgart - Germany

# இலங்கை பற்றிய சிறு தகவல்கள்...

01. சுதந்திரம் அடைந்த ஆண்டு - 1948 பெப்ரவரி 4ம் திகதி
02. புனித வெள்ளரசு மரம் நாட்டப்பட்டுள்ள இடம் - மிகிந்தலை
03. வெள்ளரசுக்கிளையைக் கொண்டுவந்தவர் - சங்கமித்தை
04. கலாச்சார முக்கோணப் பிரதேசம்-அநுராதபுரம், கண்டி, பொல்லநறுவை
05. கைப்பணிப் பொருட்கள் தயாரிக்கும் இடம் - லக்சல நிறுவனம்
06. தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
07. முதல் பிரதமர் - டி எஸ் செனநாயக்கா
08. முதல் ஜனாதிபதி - ஜே ஆர் ஜெயவர்த்தனா
09. இலங்கையைஆண்டஅந்நியர்கள்-போத்துக்கீசர்,ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
10. பேசப்படும் மொழிகள் - சிங்களம், தமிழ், ஆங்கிலம்.

செல்வி க யூ லிகா
றீத் மிஷன் – கிளிநொச்சி

# நான்விரும்பும் தொழில்

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்றார் திருமூலர். 'உடலினை உறுதி செய்' என்றார் பாரதியார். இப்படியெல்லாம் உடலை நன்கு பேணுவதன் அவசியத்தை அறிஞர்கள் வலியுறுத்தினார்கள். இதைக் கருத்தில் கொண்டு நான் உடல் நலம் பேணும் மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்து உயர்கல்வி பெற்று மருத்துவராக வர விரும்புகிறேன்.

மற்றத் துறைகளைப் போலல்ல மருத்துவத்துறை. இது உயிர் காக்கும் தொழிலாகும். இன்று இத்துறை வியாபாரம் போல் மாறி வருகிறது. மூன்றாம் உலகநாடுகளில் ஏழை எழிய மக்கள் சொல்லொணாக் கஷ்டமுறுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். பயன் கருதாத தொண்டாக இறைவனுக்குச் செய்யும் பணியாக மருத்துவத் தொழிலைக் கருதவேண்டும். நான் ஏழை எழிய மக்களுக்கு இலவச சிகிச்சை அளிப்பேன்.வசதி படைத்தோரிடம் நியாயமான கட்டணம் அறவிடுவேன்.நோயாளரிடம் பாரபட்சம் பார்க்காது சமமாக மதித்துப் பழகுவேன்.என் அன்பான

வரவேற்பும் உபசரிப்பும் நோயாளிக்கு மனத் தைரியத்தைக் கொடுக்கும் என்பதை நான் அறிவேன். தாய் நாட்டுக்கும் என்னாலான உதவிகளை நிச்சயம் செய்வேன்.

பக்திக்கு அடுத்தது சுத்தம் என்று பெரியோர்கள் கூறுவார்கள். எமது சூழல் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். சமுதாயத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள மக்கள் பலர் சுகாதார நெறிமுறைகளை அறியாதவர்களாக உள்ளார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுகாதாரக் கருத்தரங்குகள் நடாத்துவேன். பல் நாட்டுச் சமூக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நடமாடும் சிகிச்சை முகாம்களை நடாத்துவேன். முதியோர் பெண்கள் குழந்தைகள் ஆகியோருக்கு தேவைப்படும் சிகிச்சைகள் மட்டுமின்றி ஊட்டச்சத்துக்கள் பெற்றுக்கொடுத்து உடல் நலமும் உள நலமும் வாய்க்கப் பெற்றவர்களாக வாழ வழி செய்வேன். தீராத நோய்களில் இருந்து நோயாளிகளைக் காப்பாற்ற என்னாலான முயற்சிகள் எடுப்பேன். கைராசிக்கார மருத்துவர் என பெயர் எடுப்பதே என் இலட்சியம்.

மருத்துவத் தொழில் மூலம் கிடைக்கும் பணத்தில் என் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவேன்.எனது எதிர்கால இலட்சியமான மருத்துவ சேவை முழுமையானதாகஇருக்கும்.அதற்குரிய பண்புகள் அனைத்தையும் இப்பொழுதிருந்தே கற்றுக்கொள்கிறேன். அனைவருக்கும் பயனுள்ளதாக நான் விரும்பும் தொழில் இருக்கும் என்பதில் பெருமை கொள்கிறேன்.

செல்வி சிவிதா சீவரத்தினம்
Bestiwig-Germany

## விடுகதைகள்..

01. தலையில் தட்டினால் வாய்விட்டு அழுவான் அவன் யார்..

02. வாழிடத்தை தன்னோடு அழைத்துக்கொண்டு செல்லும் பிராணி எது..

03. ஒரு நிமிடத்தில் சுமார் 72 தடவைகள் துடிப்பது எது..

04. வெள்ளை வீதியில் கறுப்புக் கார் அது எது...

05. நாங்கள் நடந்து செல்லும் போது எங்கள் பின்னால் தொடர்ந்து வருவது எது....

விடைகள்:- நீர்ப்பம்பி
நத்தை
இதயம்
கண்
நிழல்

# வினாவிடைப் போட்டி முடிவு - 160
## ( பங்குனி-சித்திரை - 2015 )

1. இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் அதிகமானோர் சென்று பார்க்கும் நான்கு இடங்களின் பெயர்களை எழதுக..

அநுராதபுரம் மிகிந்தலை
சிகிரியா நுவரெலியா

2. இலங்கை வடகிழக்கில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மக்கள் வாழும் நான்கு இடங்களின் பெயர்களை எழதுக.

மட்டக்களப்பு திருகோணமலை
மன்னார் பருத்தித்தறை

3-ஐரோப்பாக் கண்டத்தில் நிலப்பரப்பில் பெரிய நான்கு நாடுகளின் பெயர்களை எழதுக..

பிரான்ஸ் - 5.43.965 ச.கி.மீ - ஸ்பெயின் - 5.05.990 ச.கி.மீ
சுவீடன் - 4.50.000 ச.கி.மீ - ஜேர்மனி - 3.57.050 ச.கி.மீ

4. உலக வரலாற்றில் இடம்பிடித்தவர்களில் நான்கு பேரின் பெயர்களை எழதுக..

நெல்சன் மண்டேலா அன்னை திரேசா
மகாத்மாகாந்தி ஆபிரகாம்லிங்கன்

5. பின்வரும் சொற்களை பிழை திருத்தி எழதுக..

அறிசி - அரிசி, உனவு - உணவு, வாழைப்பலம் - வாழைப்பழம்
சிருவன் - சிறுவன், தமில் - தமிழ் நுாழகம் - நுாலகம்

6. ஆறு எழத்துச் சொற்கள் ஆறு எழதுக..

திருக்குறள் மாணவர்கள் விடையங்கள்
எறும்புகள் இல்வாழ்க்கை குளிர்காற்று

# வினாவிடைப் போட்டி -161

## (வைகாசி- ஆனி - 2015)

1. இலங்கையில் மலையகமக்கள் அதிகமாக வாழும் நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக

   ---------------- ------------ ----------- --------------

2. இலங்கையின் முதல் பிரதமமந்திரியின் பெயர் என்ன------------------
   இலங்கையின் முதல்ப்பெண் பிரதமரின் பெயர் என்ன-------------------

3. ஐரோப்பாவில் யூரோ நாணயம் புழக்கமில்லாத நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக.

   ---------------- ------------ ------------- ---------------

4. ஐக்கியநாடுகள் சபையின் தலைமை அலுவலகம் எந்த நாட்டில் எந்த இடத்தில் அமைந்துள்ளது ---------------- ----------------
   சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் எந்த நாட்டில் எந்த இடத்தில் அமைந்துள்ளது ----------- -------------

5. சேர்த்தெழுதுதல்... பிரித்தெழுதுதல்...

| | | | |
|---|---|---|---|
| கலை+வகுப்பு | ------------ | தேங்காய் | --------------- |
| பழம்+கடை | ------------ | பாடப்புத்தகம் | --------------- |
| கண்+நீர் | ------------ | வாணிவிழா | --------------- |
| கல்+அறை | ------------ | மழைத்துளி | --------------- |
| கடல்+அலை | ------------- | கடற்கரை | --------------- |

6. நீங்கள் விரும்பிய திருக்குறள் ஒன்றையும் அதன் பொருளையும் எழுதுக....

முடிவுதிகதி:30.06.2015

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 85

## (பங்குனி- சித்திரை 2015)

| | | | |
|---|---|---|---|
| கா | த | ல | ர் |
| ம் | ட | ட் | தி |
| லை | கா | டு | த் |
| வ | து | மே | சி |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 86

## (வைகாசி - ஆனி - 2015)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ: –

01-04 இது இல்லாவிடின் உலகமே இயங்காது

06-07 இது ஒரு கொடிய மிருகம்

வ – இ: –

06-05 சமாதானத்திற்குப் புகழ் சேர்க்கும் பறவை

16-15 கல்வியில் ஒரு துறை (பிரிவு)

கீ – மே: –

16-08 களவெடுப்பவனின் எதிர்பாற்சொல்

14-06 படையும் நடுங்கும் உயிரினம்

மே – கீ: –

01-13 இந்த இயற்கை அழிவினாலும் பல உயிர்கள் மடிகின்றன

11-15 நம் தாயகத்தில் இயற்கை வளங்களில் ஒன்று

முடிவு திகதி: **30.06.2015**

# சிறுவர் போட்டி முடிவுகள்
## (பங்குனி - சித்திரை 2015)

### பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்.

செல்வி. நந்தனா.கனகராசா - Mönchengladbach
செல்வி. சாதனா.தேவானந்தராசா - Mönchengladbach
செல்வி. மயூரா திருச்செல்வம் - Swiss
செல்வி. சரிதா நந்தகுமார் - Holland

செல்வன். லக்ஷன் தயாநாதன் - Mönchengladbach
செல்வன். திவீயன் தயாநாதன் - Mönchengladbach
செல்வன். ராகுல்.கனகராசா - Monchengladbach
செல்வன். நிரோசன் சிவநாதன் - Frankfurt
செல்வன். பரன்.பாலச்சந்திரன் - Geilenkirichen
செல்வன். சாருசன் ஜெகதீஸ்வரன் - Mönchengladbach
செல்வன். விதுர்சன் ஜெகதீஸ்வரன் - Mönchengladbach

### பரிசுபெறும் அதிஸ்டசாலிகள்.

செல்வி மயூரா திருச்செல்வம் - Swiss
செல்வி சரிதா நந்தகுமார் - Holland
செல்வன் நிரோசன் சிவநாதன் - Frankfurt

போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மணிகளுக்கும் பாராட்டுக்களும்..வாழ்த்துக்களும்!..தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குகொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..

---

**நன்றிகள்!..**

**மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு**
**செல்வன் பானுஸ்கந்தா-புவனேந்திரன்**
Duisburg

**மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு**
**செல்வன் சிவகாந்த்-சிவராசா**
Duisburg

# விளையாட்டில் இளைய தலைமுறை...



சுவிஸ் Jura தேசிய மாநில Ice Hockey கழகத்தில் mini top பிரிவில் பந்து காப்பாளராக 13 வயதான அஸ்வின் சிவசுப்பிரமணியம் விளையாடி வருகிறார். இவர் கடந்த பெப்ரவரி மாதம் Canada Bantiam Granby யில் நடைபெற்ற சர்வதேச Ice Hockey U 14 பிரிவு போட்டியில் Team Swiss அணி பந்து காப்பாளராக விளையாடியுள்ளார். இதில் Swiss team champions கிண்ணத்தையும் நடைபெற்ற அனைத்து போட்டிகளிலும் அஸ்வின் இரண்டாவது சிறந்த பந்து காப்பாளர் பட்டத்தையும் பெற்று அனைவரினது பாராட்டையும் பெற்றுள்ளார்.

அஸ்வின் team Swiss அணிக்காக விளையாடுவது இது முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.அத்தோடு அஸ்வின் Swiss இல் முன்னணி கழகங்களின் ஒன்றான EHC Bienne (LNA) mini top பிரிவில் பந்து காப்பாளராக விளையாடி வருகின்றார். மண்ணின் வாசகர்களும் இந்த வீரனை வாழ்த்தி மகிழ்கிறார்கள்.

(இச்சிறுவனைப்போல் சாதனைபுரிந்து வருபவர்களின் படங்களையும் விபரங்களையும் எமக்கு அனுப்பி வையுங்கள். மண்ணின் வாசகர்களும்பயன்படுவார்கள்)

## சிரி...சிரி...சிரிப்பு...

ஆசிரியர்.- மாணவர்களே நான் ஒரு பழமொழி சொல்வேன் அதை நீங்கள் முடிக்க வேண்டும். உப்பிட்டவரை.......
மாணவர்கள்- உலக்கையால் அடி....

கணவன்.-ஏணஆடி மரக்கறிக்கடையில் அம்புலன்ஸ் வண்டி நிற்கிறது
மனைவி:- அது வேறொன்றுமில்லை மரக்கறி விலையைக் கேட்டவுடன் ஆண்கள் சிலர் மயங்கிவிடஇடார்களாம்...

டாக்டர்:- உங்கள் மனைவிக்கு ஒரு பல் பிடுங்க நூறு யூரோ செலவாகும்..
கணவர்:-ஆயிரம் யூரோ தருகிறேன் அவவின் நாக்கையும் பிடுங்கி விடுங்கள் டாக்டர்...

வீட்டுக்காரன்:-நம்ம தோட்டமெல்லாம் எப்படி இருக்கு..
வேலைக்காரன்:- உங்க மனசுபோல இருக்கு ஐயா..
வீட்டுக்காரன்:- எப்படி...
வேலைக்காரன்:- ஈரமே இல்லையே......

மகன்-அப்பா என்ர பல்லு ஆடிக்கொண்டே இருக்கிறது..
அப்பா:-மகனே எப்ப அரங்கேற்றம் செய்யலாம்.....

திருமதிஜெயா நடேசன்
ஜோமனி.

## நேர்முகப்பரீட்சையில்........

தொழிலதிபர்:- குட் மோணிங்
தேர்வாளர்:- குட் மோணிங் மடம்
தொழிலதிபர்:- உங்களுடைய பெயர் என்ன..
தேர்வாளர்:-............. (மௌனம்)
மொழிலதிபர்:-நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்....
தேர்வாளர்................ (மௌனம்)
தொழிலதிபர்:- என்னய்யா நான் கேள்வி கெட்டுக்கொண்டிருக்கிறன் நீ பேசாம உம்மெண்டு இருக்கிறாய்....
தேர்வாளர்:-இல்ல மெடம் எங்க பேரன்ஸ் நான் புறப்படும் போது நல்ல நேரா முகத்தைப் மட்டும் பாத்திடு ராசா.... எங்கையும் திரும்பாதே என்று சொன்னார்கள் அதுதான் நான் அசையவில்லை (Face to Face) உங்கட முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறன்.........

செல்வி நா சங்கீதா
இந்து அன்பகம் – வவுனியா

# குறளும் பொருளும்

## பொறையுடைமை

151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

152. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

153. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

156. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

157. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

159. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

# குறளும் பொருளும்

## பிறர் செய்த குற்றம் பொறுத்தல்

151. தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலத்தைப்போல மற்றவர் அவமதிப்பதையும் பொறுத்துக்கொள்ளல் முதன்மையான தர்மமாகும்.

152. பிறர் செய்யும் தீங்கினைப் பொறுத்துக்கொள்வது நல்லது. அதைவிட நல்லது அத்தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது.

153. விருந்தினரை விலக்குவது வறுமையுள் வறுமையாகும் அதுபோல் வலிமையுள் வலிமையாவது அறியாமையினால் ஒருவன் செய்த தீமையைப் பொறுத்துக்கொள்வது.

154. ஒருவன் பெருமையிலிருந்து நீங்காதிருக்க விரும்பினால் பொறுமையைப் போற்றிக் காத்துக்கொள்ள வேண்டும்.

155. தீங்கு செய்தவரைத் தண்டித்தவரை அறிஞர் ஒரு பொருளாக மதிக்கமாட்டார். ஆனால் அத்தீங்கினைப் பொறுத்தவரைப் பொன்மனச் செம்மல் என்று புகழ்வர்.

156. தீமை செய்தவனைத் தண்டிப்பது ஒரு நாள் இன்பம். ஆனால் அத்தீங்கினைப் பொறுத்தவருக்குச் சாகும்வரை புகழ் உண்டாகும்.

157. கொடுஞ்செயலை நமக்கு ஒருவன் செய்தாலும் அதனால் வரும் துன்பத்திற்கு நொந்து அறனல்லாததைச் செய்யாதிருப்பது நல்லது.

158. மனச்செருக்கால் தனக்கு ஒருவன் கெடுதலைச் செய்தாலும் தனது பொறுமையால் அதை வென்றுவிடவேண்டும்.

159. நன்னெறியிலிருந்து நீங்கியவரின் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் துறவியைவிடத் தூய்மையானவர்.

160. உணவு உண்ணாமல் விரதம் காண்பவர் பெரியவர். அவருக்குப் பிறர்சொல்லும் தீய சொற்களைப் பொறுப்பவர்களுக்குப் பிற்பட்டவராவர்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்!...

## நடப்பு...

சேவல் கூவியது. "நான் எழும்போது இந்தச் சேவல் எத்தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகிறது" என்று கதிரவன் பூரித்துப் போனான். மாலை நேரமாகியது..கதிரவன் மேற்குத் திசையின் மூலையில் கவிழ்ந்தான். சாயும் போது "நான் விழுகிறேனே...என்னைத் தாங்க யாருமே வரமாட்டார்களா" என்று ஏங்கினான். சேவலை அவன் எதிர்பார்த்தான் வரவில்லை. விழுந்துகொண்டே கதிரவன் சொன்னான்..

"எழும்போது தாங்க வருகிறவனெல்லாம்
விழும்போது தாங்க வருவதில்லை"

## காலம்....

குருவிக்கூடு. சிறகுமுளைக்காத குஞ்சுகள் சிறிது ஆரவாரித்தன. மரத்திலிருந்த அணில் குருவிக்கூட்டுக்குத் தாவி "உங்களுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை...சுதந்திரம் இல்லாத உங்களுக்கு என்ன சிரிப்பு" என்று கேட்டது. குஞ்சுகள் கவனிக்கவில்லை. பாம்புக்கு இது வாய்ப்பானது. குஞ்சுகளின் சிரிப்பொலி கேட்டு, பாம்பு கூட்டுக்குள் நுழைந்தது. நொடிப்பொழுதில் பாம்பின் வாயில் குஞ்சுகள் பலியாகிப் போயின. அணிலுக்கோ துயரம் தாங்கமுடியவில்லை. அது மீண்டும் இரைந்து கத்தியது..

"சிறகுவிரி பிறகு சிரி"

## உயர்வு....

இரவின் பிடியில் அழுந்திக் கண்ணீர் விட்டது வானம். கண்ணீர் பனித்துளிகளாய் விழுந்தபோது வானத்தின் துன்பத்தை எண்ணி வருந்திய பசும்புல் கண்ணீர்த்துளிகளைத் தாங்கிக்கொண்டே வந்தது. ஒவ்வொரு நாளும் புல் ஓங்கி வளர்ந்தது. பரவி உயர்ந்து எங்கணும் பச்சைக்காடாய் நிறைந்தது பசும்புல். காலைக்குருவி பாடியது..

"ஏங்குவான் கண்ணீரைத் தாங்குவான் உயர்வான்"

# குடமுழுக்கு

ஆலயங்களில் குடமுழக்கு என்று ஒரு திருவிழா நடைபெறுகின்றது. தங்கம், வெள்ளி, செம்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களில் தானியங்கள், குறிப்பாக வரகு நிறையக் கொட்டப்படும். ஏன் தெரியுமா? வரகிற்கு இடி, மின்னலைத் தாங்கும் ஆற்றல் உண்டு.

எனவே சிறந்த இடிதாங்கியாகச் செயல்படுகிறது. கோபுரத்தின் உயரம் 50 மீட்டர் என்றால், இது 7,500 மீட்டர் பரப்பளவுக்கு இடி, மின்னலைத் தடுப்பதால், அந்த எல்லைக்குள் இருப்பவர்களை இடி, மின்னல் தாக்காது. கோயில்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்என்பதற்கான அறிவியல் காரணம் இதுதான். இந்த தானியங்களுக்கு 12 வருடங்களுக்குத்தான் இந்த சக்தி இருக்கும். எனவே தான் 12 வருடங்களுக்கு ஒருமுறை குட முழக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்களை அகற்றி, புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது. ஒவ்வொரு சம்பிரதாயமும் அறிவியல் ரீதியாக அர்த்தமுள்ளது என்பது ஆச்சரியத்துக்குரியது.சுவாரசியமான கதை

# பொது அறிவு

01-அலுமினியத்தைக் கண்டுபிடித்தவர் - எப் ஹோலர் (1827)
02-கல்சியத்தைக் கண்டுபிடித்தவர் - எச் பேலி (1808)
03-ஹைட்ரஜனைக் கண்டுபிடித்தவர் - எச் கேவெண்டிஸ் (1766)
04-பொஸ்பரசைக் கண்டுபிடித்தவர் - எச் பிராண்ட் (1669)
05-பொட்டாசியத்தைக் கண்டுபிடித்தவர் - டேவி (1669)
06-ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் - எச் கியூரி (1807)
07-றைட்ரஜனைக் கண்டுபிடித்தவர் - டி ரூதர் போர்டு (1772)
08-யுரேனியத்தைக் கண்டுபிடித்தவர் - ஈ எம் பெலிகாட் (1841)
09-அயோடினைக் கண்டுபிடித்தவர் - வி கோட்பாய்ஸ் (1812)
10-நிக்கலைக் கண்டுபிடித்தவர் - எ க்ரான்ஸ்டெட் (1751)

செல்விக யூ லிகா
றீத் மிஷன் - கிளிநொச்சி

# நுணாவில்குளத்து தாமரைப்பூச் சாமியார்

மட்டுவில் ஞானக்குமரன்-கனடா

என்னூரில் ஒரு வயோதிபர்
சிறு குழந்தைக்கு வைக்கப்படும் நெத்திப்பொட்டின்
நிறத்திலொரு தேகம்
இளக்கயிறும் அவர் முடியும் ஒரே மாதிரி
உருண்டு திரண்டு
நீண்டுதொங்கிய தலைமுடி
கறுப்பு நிறத்திலொரு ஆதிசிவன்

அவர் பிறவிப்பயன் யாதெனில்
பனிபடர்ந்த நுணாவில் குளத்தில்
அதிகாலை சூட்டை
முறித்தெடுக்கும் சில்லிட்ட குளிர் நீரில்
தாமரைப் பூப்பறித்து முருகனுக்குச் சூட்டுவது.

இடுப்பிலே கட்டிய ஒரு முளவேட்டி தவிர
வேறெதுவும் சொத்துமில்லை
ஏனென்று கேட்க ஏதொரு சொந்தமில்லை

சுவாமிக்கடன் முடித்து வீடுட்டுப்பக்கம் வருமிவர்
ஆவி பறக்கின்ற வென்நீரோ
இனிப்பிருக்கோ இல்லையோ என
நாவே அறியாத் தேனீரோ
பருகிப்போவார்

ஞாபகம் சரியாய் இல்லை
ஏதோ ஒரு நாளில் விமானக்குண்டுக்கு
விடைபெற்றுப்போனார்

ஒரு முளத்துண்டுக்கே ஆசைப்படாச் சாதுக்கு
எதனைக்கேட்டதானால் வந்திருக்கும் சாவு
பிஞ்சுப்பெடியெனுக்கு
விளங்கவில்லை அப்போது
பிரபஞ்சத்தின் முழுமை இலாது
வாழ்கையின் முதிர்வு வாராது
யாக்கை பறிபோகுமோ

வருசங்கள் எத்தனை வழிந்த போதிலும்
விழியில் வழிந்தொழுகிறது
வென்னீர்க்குளம்
போர் தின்ற சனங்கள்
பிரிந்த நாய்
விடை பெற்றுப்போன அப்பா
இப்படியே இப்படியே
நினைவுகளைக் கொழுத்தியெறிய
தெரியாமல் போகிறதே!

## முதுமை.........

உன்னில் நானும் என்னில் நீயும்
ஒன்றாய் இணைந்தே உலவுகின்றோம்
கனவு இல்லை காமம் இல்லை
காணும் கண்ணில் பரிவு ஒன்றே!....

தள்ளாடி நீயும் தளர்ந்தே நானும்
தாங்கிடும் கோலாய் தாங்கியே நிற்கிறோம்
சொந்தங்கள் யாவும் தாரமாய்ப் போக
சொத்துக்களாக மருந்தும் நோயும்!...

சொர்க்கம் இதற்குள் நிறைவாய் பொங்கும்
தாயாகி நானும் தாயுமானவனாய் நீயும்
தற்பெருமை தன்முனைப்பு தடைகளில்லை
தருவதும் பெறுவதும் அன்பு ஒன்றே!...

நிர்மலமான நிறைவினை நிறைக்க
நின்றது முதுமை முகவரி ஒன்றே
காதலில் கரைந்து காதலாய் வாழ்ந்து
கரம்பற்றி நிற்கும் கணங்கள் சுகமே!...

திருமதி கீத்தா பரமானந்தன்
ஜேர்மனி

# யாதுமாகி.........

(வன்னி மண் மீதான நில ஆக்கிரமிப்புப்போரில் உயிர் குடிக்கப்பட்ட பல ஆயிரம் பெண்களுக்கும், தாய்மாருக்கும் இக்கவிதை உணர்வர்ப்பணம்!)

இடம்பெயர்தலின் வலி பற்றியும்
மரணங்களை எண்ணிக்
கொண்டிருத்தல் பற்றியும்
பேசிக்கொண்டிருக்கும் ஈழத்தில்,
தாய்க்குலம் தம் சேலை உருவி
கூடாரம் அமைத்தும்,
சாக்குப்பைகளாக பொத்தி
தடுப்புச்சுவர் அமைத்தும்
நம் சரீரம் காத்த
தியாகம் பற்றியும் பேசுகிறேன்.
ஆகாயத்தை விடவும்
அழகானதும்,விசாலமானதும்
ஆன பொருள் உண்டென்றேல்,
தாய்மாரே
அது நிச்சயம்உங்கள்சேலை தான்.
மல்லாக்காக
படுத்துக்கொண்டே
உங்கள் சேலையில் உள்ள
வட்டங்களையும் சதுரங்களையும்,
கோணங்களையும் கோடுகளையும்,
புள்ளிகளையும் பூக்களையும்,
பட்சிகளையும் பறவைகளையும்,
கிறுக்கல்களையும் கீறல்களையும்,
பார்த்துப்பார்த்து
தொட்டுப்பேசி,
பல ஆயிரம் குழந்தைகள்
சித்திரமும் கணிதமும்
கற்றிருக்கிறார்கள்.

துப்பாக்கிச்சன்னங்களும்
எறிகணைச்சிதறல்களும்
உங்கள் சேலையை
சல்லடை இட்டபோதும்,
பொத்தல்கள் வழி
இன்னுமோர்
உலகத்தைக்காட்டி
முடிந்தவரை
எம் அவல வாழ்வை
அழகாக்க உழைத்திருந்தீர்கள்.

மொத்தத்தில்,
சேலையை சோலையாக்க
நீங்கள் காட்டிய
சிரத்தை போல் பரிசுத்தம்,
இவ்வுலகில்
வேறொன்றுமில்லை.

தாயகக் கவிஞர்,
-அ.ஈழம் சேகுவேரா-

# கசங்கிய முல்லையானாள் வித்தியா....

கவிஞர்: மட்டு மதியகன்

கழிப்பறையில் பிறந்தவர்கள்
உன்னை கற்பழித்த காடையார்கள்
வெடிகுண்டு மழையில் நனைந்த நீயோ
கடிநாய்களின் கையில் கைக் குழந்தையானாய்
பள்ளிக்கு சென்ற நீயோ
படுபாவிகள் கையில் கசங்கிய முல்லையானாய்
தொல்லை அகன்ற வாழ்வை புதைதைத்தவர்கள் நாம்
வெள்ளைநிற ஆடைஎன்று வேட்டைநாய்களுக்கு விளங்கிடுமா?
பிஞ்சுக் குழைந்தை நீ யென
பஞ்சப் பரதேசிகளுக்கு புரியலையே
தங்கத்தமிழ் குழந்தையே தயங்காது சென்றிடு
எங்கள் குலம் இப்படியே அழிந்திடும்
மேய்ச்சல் மாடுகளுக்கு இருக்கும் துணிச்சல்
பாராண்ட தமிழனுக்கு இன்றில்லை
செத்துப்போனது நீதி
சொத்துள்ளவன் பக்கமே நீதி
என்ன பாவம் செய்ததையா எங்கள் குலம்
சோதனைகளோடு வெம்பி வாழ்கின்றோமைய்யா
பாதுகாப்பை இழந்துவிட்டோம்
பாவாடைராயர்களுக்கு வேட்டை
அட்டூழியக்காரானுக்கும் ,அடுத்தவனுக்கும்
இரையாகிப்போகுமா? எம்மினம்
இதைக்கண்டு இயல்பாக இருக்குமா? எம்மனம்
இந்த நாசம் பெரும் சேதத்தை தரும்
உன்னை பலி தீர்த்தவர்கள் விழியின்றிப்போவார்கள்
வாழ வழியின்றி அலைவார்கள்
அள்ளிநீர் பருக கரமின்றி காமுகன் திரிவான்
கொள்ளிவைக்க யாருமின்றி
படுக்கையில் மலம் போய்க்கிடப்பான்
உன் கன்னங்களால் வழிந்த நீருக்கு
கையாலாகாத நாம்
வஞ்சத்தை வார்த்தையால்



# மண் (170) அட்டைப்படக் கவிதை




சூரியனின் திசைநோக்கி சுவாசிக்கும் பூக்களல்ல -இவை
சுழன்றுவரும் பூமிப்பந்தின் சுடரான குறிஞ்சிமலர்கள்
கூரிய ஞானத்தோடு குவலயத்தின் விடிவுக்காய்
கொண்ட கொள்கைமாறாது குவிந்த மலர்க்கொத்து..

நேரிய பார்வையோடும் நிமிர்ந்த நன்நடையோடும் -நன்
நெறிமுறை நழுவாது நிதர்சனமாய் உழைத்த பூக்கள்
பாரிய தடையுடைத்து பணிகளில் வெற்றிகண்டு
பாரினையே நடக்கவிட்ட பாவைகளின் அணிவகுப்பு..

வீரிய சக்திதிரட்டி விரிந்த இஞ்ஞாலத்தின் -இருளகற்றி
விடிவினுக்காய்ப் போராடி வெற்றிச்சிகரம் தொட்டவர்கள்
காரியத்தில் கண்ணாயிருந்து காய்நகர்த்தி கடமைபார்த்து
காலகாலமாய் வாழகின்ற காரிகைகளின் துளிக்குவிப்பு..

சீரிய கருத்துக்களுடன் சிந்தைக்கினிய பணியாற்றி-இச்
சீலத்தின் மகளிர்தினத்தை சிறப்பு அட்டைப்படமாக்கி
மாரியில் பூத்த மலர்க்குவியலாய் மக்கள் மகிழ்ந்தன்று
மனங்குளிர்ந்திட வைத்தமைக்கு நன்றி மண்மகளுக்கு...

# நாட்டியத்தின் உட்பிரிவுகள்... (சென்ற இதழ் தொடர்ச்சி)

திருமதி சாந்தினி துரையரங்கன்
ஜோமனி.

நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பன நடனத்தின் உட்பிரிவுகளாகும்.

நிருத்தம்.

1.அழகிய உடல் அசைவுகளைக் கொண்ட நடனக்கலையைக் குறிக்கும்.

2.தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கருத்தை வெளிப்படுத்தாத ஆடல் முறை நிருத்தம் ஆகும்.

3.வெறும் தாளச் சொற்கட்டுகளுக்கு ஆடப்படும் நடன வகையாகும்.

4.நிருத்தம் செய்யும் போது கையோடு கண்களை அசைத்து மனதை அதில் செலுத்தி அனுபவித்துச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் தான் பார்பதற்கு ரசிக்கும் வண்ணம் அமைந்திருக்கும்.

5.உதாரணம் அலாரிப்பு, ஜதீஸ்வரம்.

நிருத்தியம்

1.நிருத்தம், அபிநயம் இரண்டும் கலந்த நடன வகையாகும்.

2.இது தாளகட்டுப்பாட்டுடன் கருத்தை வெளிப்படுத்தும் நடனமாகும்.

3.ரஸ பாவங்கள் இதில் காணப்படும்.

4.பாட்டின் பொருளிற்கு ஏற்ப அபிநயங்களை காண்பித்து பாத அசைவுகளிற்கு ஏற்ற தாளத்துடன் ஆடப்படும்.

5.உதாரணம் சப்தம், வர்ணம், தில்லானா

நாட்டியம்

1.நாட்டியம் என்பது நடனமும் நாடகமும் சேர்ந்ததாகும்.

2.கதை, இசை, நடன அசைவுகள் என்பன அடங்கியிருக்கும்.

3.இதில் நிருத்தம், நிருத்தியம் இணைந்திருக்கும்.

4.ஒரு கதையினை பாவத்தினாலும், அபிநயத்தினாலும் தத்ரூபமாக நடித்துக் காட்டுவது நாட்டியமாகும்.

5.இது பலர் சேர்ந்து நடாத்தப்படும் நாட்டியமாகும்.

6.புராண இதிகாசக் கதைகளை நடித்து நாட்டியநாடகமாக செய்வதனை உதாரணமாக கூறலாம். நவீன காலத்திற்கு ஏற்பவும் நாட்டிய நாடகங்கள் செய்யலாம்.

## கோர்வை

பல அடவுகள் சேர்ந்து அமைவது கோர்வையாகும். இது லயத்துடன் (தாளம்) அமைந்திருக்க வேண்டும். இதனை பூமாலைக்கு ஒப்பிடுவர். பல பாதபேதங்களும், மண்டலபேதங்களும், முத்திரைகளும் சேர்ந்து அமைந்ததே கோர்வையாகும்.

## கோர்வை அமைக்கும் போது கவனிக்க வேண்டியவை.

1.பாட்டின் தாளத்திற்கு ஏற்ப அமைக்கப்பட வேண்டும்.

2.முதலாவது காலத்தில் தொடங்கி (விளம்பித காலம்) இரண்டாம் காலம் அடைந்து (மத்திம காலம்) மூன்றாம் காலத்தில் (துரித காலம்) முடிய வேண்டும்.

3.பாட்டின் வன்மை மென்மைக்கு ஏற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

4.ததிங்கிணத்தொம், கிடதகதரிகிடதொம் போன்ற தீர்மான அடவு சொற்கட்டுகளுடன் முடிய வேண்டும்.

5.அடவுகள் இரண்டு பக்கமும் ஒரே சீராக அமைந்திருக்க வேண்டும்.

6.கோர்வை அமைக்கும் போது எல்லா பக்கமும் நகர்ந்து செய்யக் கூடியதாக அமைக்கப்பட வேண்டும்.

7.பலஜதிக்கட்டுகளுக்கேற்ப தீர்மானங்களுடன் உருவானது கோர்வையாகும்.

## அஸம்யுத கஸ்தாஹ – (28)

## (ஒற்றக்கை முத்திரை)

பதாகஸ் த்ரிபதாகோ அர்த்தபதாக கத்தரிமுகஹ/
மயூராக்யோ அர்த்தசந்ரஸ்ய அராள சுகதுண்டகஹ//
முஸ்ரிஷ்ச சிகராக்யஷ்ய கபித்தக கடகாமுகஹ/
சூசி சந்ரகலா பத்மகோஷஹ சர்ப்பசிரஸ்ததா//
ம்ருகசீர்ஷஹ சிம்ஹமுகக காங்கூலஸ்ச அலபத்மகக/
சதுரோ ப்ரமரஸ்சைவ கம்சாஸ்யோ கம்ஷபக்சகக//
சம்தம்சோ முகுளஸ்சைவ தாம்பிரசூட த்ரிசூலகக/
இத்யா அஸம்யுதானம்ஷ்ட விம்சாரிதா.//

ஸம்யுத கஸ்தாஹ - (24)
(இரட்டைக்கை முத்திரை)

அஞ்சலிஸ்ச கபோதஸ்ச கர்கடஹ ஸ்வஸ்திகஸ்ததா
டோலாஹஸ்தஹ புஸ்படுட உத்ஸங்கஹ சிவலிங்ககஹ
கடகாவர்த்தனஸ்சைவ கர்தரீஸ்வதிகஸ்ததா
சகடம் சங்க சக்ரேச ஸம்புடஹ பாச கீலகௌ
மத்ஸ்யஹ கூர்மோ வராஹஸ்ச கருடோ நாகபந்தகஹ
கட்வா பேருண்டோ அவகித்தஸ்ய தைவச
இத்யதே ஸங்க்யாதாஹகராஹ
த்ரையோ விம்சதிரிதஇயுக்தாஹபூர்வகை பரதாதிபிஹி.

(பரதம் அடுத்த இதளில் தொடரும்)

# அன்பான வேண்டுகோள்!.

மண் சஞ்சிகையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் போட்டிகளான குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடைப் போட்டி, கண்டுபிடியுங்கள் போட்டிகளில் பங்குபற்றும்மாணவர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துவருவதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம். மாணவமணிகளின்தாய்மொழிக் கல்வி,எழுத்தாற்றல், சிந்தனையாற்றல், அறிவியல் விடையங்களில் மேம்படவேண்டும் என மண்சஞ்சிகை பல ஆண்டுகளாக எடுத்துவரும் செயற்பாடுகளுக்கு நீங்கள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் ஆதரவுகள் குறைவடைந்துவருவதால் இந்த மூன்று போட்டிகளையும் தொடர்ந்து நடத்துவதா!..என்னும்கேள்வி எழுந்துள்ளது. பங்குகொள்ளும் மாணவமணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் போட்டிகளை நிறுத்தவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். எனவே அடுத்துவரும காலங்களில் போட்டிகளில்கலந்துகொள்ளும் மாணவ மணிகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கப்படும். ஆகவே பெற்றோர்களும் மாணவர்களும் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிப் பயன்படும் வண்ணம் அன்போடு கேட்டுகொள்கின்றோம்!.

ஆசிரியர்.

# வாழ்க்கையில் வெற்றி பெறும் வழிகள்....

திருமதி கௌசி சிவபாலன் - ஜேர்மனி

”அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்ற ஔவையார் கூற்றுக்கிணங்க அரிய பிறப்பாகிய மானிடப் பிறப்பெடுத்த மனிதன், மற்றைய உயிர்களினின்றும் மேம்பட்டவன். மனம் என்ற மாபெரும் சக்தி படைத்தவன். மனதைக் கொண்டிருப்பதனாலேயே நாம் மனிதர்களாகின்றோம். வளமுடன் வாழ வழி காட்டுவது அந்த மனம்தானே. இந்த மனதின் சக்தியை சிதற விடாமல் ஒரு குறிக்கோளுக்குள் குவித்தோமேயானால், நாம் எண்ணுகின்ற எக் காரியங்களிலும் வெற்றியை அடைந்து விடலாம்.

நமது எண்ணங்களை சிதறவிடாது நமது குறிக்கோளில் மனம் முழுவதையும் ஒருமுகப்படுத்துகின்றபோது எண்ணங்களுக்கு ஆற்றல் மிதமாகின்றது. அடுப்பில் ஒரு பாத்திரத்தினுள் நீர் கொதித்துக் கொண்டிருக்கும் போது, அந்தப் பாத்திரத்தின் மூடி தள்ளியதைப் பார்த்த ஜேம்ஸ்வர்ட் தனது கவனம் முழுவதையும் அதில் செலுத்தி நீராவிக்குத் தள்ளும் சக்தி இருக்கின்றது, என்று அறிந்து ரயில் என்ஜினைக் கண்டுபிடித்தார். அப்பிள் மரத்தில் இருந்து விழும் பழம் கீழ் நோக்கி விழுவதை அவதானித்து ஏன் விழுகின்றது! மேலே செல்லவில்லை என்று சிந்தித்துத் தனது கவனம் முழுவதையும் ஒருமுகப்படுத்திய சேர்.ஐசாக்.நியூட்டன் புவியீர்ப்பு சக்தியைக் கண்டறிந்தார். லூதர் பர்பாங் ஆண்டுக்கணக்கில் ஆராய்ச்சி செய்து செடி கொடிகளுக்கு உயிர் இருக்கின்றது என்று கண்டறிந்தார். கணனிக்குள் தன் மூளையை ஒருங்கிணைத்த காரணத்தினாலேயே வின்டோஸ் நிறுவனத்தின் உரிமையாளர், பில்கேட்ஜ் இன்று உலகத்திலேயே இரண்டாவது பணக்காரன் என்ற நிலையை அடைந்துள்ளார்.

ஒரே விடயத்தில் தமது எண்ணங்களைச் செலுத்தியவர்களே தலைசிறந்த விஞ்ஞானிகளாகியிருக்கின்றார்கள். எனவே, எண்ணங்கள் ஒருமுகப்படுத்தப்படல் வேண்டும். சூரியனுடைய கதிர்களை ஒரு கண்ணாடி லென்ஸ் மூலம் குவிக்கும் போது ஒளிக்கதிர்கள் ஒன்றாக திரண்டு லென்ஸை ஊடுருவிச் சென்று எரிக்கின்ற நெருப்பாக மாறுகிறது.
லென்ஸின் கீழே வைக்கப்பட்டிருக்கும் பஞ்சை எரித்துவிடுகின்றது.

திரண்டு ஒரு நிலைப்படும் எண்ணம் உச்சத்தை அடையும். ஒரு செயல் வெற்றியடைய வேண்டுமானால் முழுமனத்தையும் செலுத்துவது, முழு ஆற்றலையும் ஒன்று குவிப்பது, முழு அறிவையும் புகுத்துவது போன்ற 3 திறன்களும் ஒன்றிணைய வேண்டும். அப்போது தான் வெற்றி கிட்டும்.

முதலில் ஒரு குறிக்கோளைத் தெரிவுசெய்ய வேண்டும். தன்னம்பிக்கையுடன் அக்குறிக்கோளைப் பிரார்த்தனை மூலம் ஒவ்வொரு நாளும் மனம் ஒன்றிக் கேட்கும் போது மனதில் ஆழமான உறுதி ஏற்படும். பிரார்த்தனை என்ற பெயரில் எமது மனதிற்கு நாமே கட்டளையிடுகின்றோம் அல்லவா. இதன் மூலம் ஆழமாகக் குறிக்கோள் மனதில் பதியும். அப்போது முயற்சியில் மனம் ஒன்றி விடும். வாகனம் ஓட்டும் போது எப்படி மனம் ஒன்றி வாகனத்தைச் செலுத்துகின்றோம் அப்படியேதான். இந்த மனித உடலால் எதுவுமே செய்ய முடியாது. மனம்தான் எல்லாவற்றிற்கும் காரணம். அதனை வெற்றி கொள்ளுங்கள். வெற்றி என்பது நாம் விரும்பியதெல்லாம் வெற்றி கண்டு விடுவதல்ல. எம்முடைய தீமைகளைத் தீய எண்ணங்களைத் தீய ஆசைகளை தீய செயல்களை வெற்றி கொள்ள வேண்டும். வள்ளுவர் வழியில் தவம் என்னும் நாலிலும் தீய எண்ணங்களில் நின்று வெற்றி கொள்தல் மாபெரும் வெற்றி என்கிறார். இவையெல்லாவற்றையும் வென்றுவிட்டால், பிறரால் நாம் குறை கூறப்பட மாட்டோம். குறையில்லாமல் வாழகின்ற வாழ்க்கையே மேன்மையான வாழ்க்கை. இவ்வாழ்க்கையுடன், நாம் கொண்ட ஒரு குறிக்கோளை நோக்கி மனம் ஒருமைப்பாட்டுடன் செல்லும் போது நாம் கொண்ட குறிக்கோளில் வெற்றி காணலாம்.

குறிக்கோளை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், முயற்சி என்பது முழுமனதிலும் நிறைந்திருக்க வேண்டும்.முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' 'முயற்சி திருவினையாக்கும்" எனப்படுகின்ற பழமொழிகளை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், சந்தர்ப்பம் சூழ்நிலை சரியான முறையில் அமையாதுவிட்டால், எப்படி முயன்றாலும் 'சாண் ஏற முழம் சறுக்குவது' போலவேதான் அமையும். எனவே சந்தர்ப்பம் சூழ்நிலையைச் சரியான முறையில் அமைத்துக் கொள்வது அவரவர் கடமையாகும். சூழ்நிலையை மாற்றியமைப்பதுவும் முயற்சியின் ஒரு வடிவமாகவே கருதப்படுகின்றது. சூழ்நிலையைச் சாதகமாக்கி சாதிக்க நினைக்கும் காரியத்தில் முழு ஈடுபாட்டுடன் முன்னேற வேண்டும். மனிதப் பரிணாமக்கோட்பாட்டின் தந்தை சார்ள்ஸ் டாவின் அவர்கள் தான் வாழ்ந்த சூழலைத் தன் ஆராய்ச்சிக்கு ஏற்ப மாற்றியமைத்தார். புழுவோடும் பூச்சிகளோடும் தன் வாழ்நாளைக் கழித்தார். பரிணாமக் கோட்பாட்டின் தந்தையானார்.

சூழ்நிலையில் பங்கம் வருகின்றபோது விதியை நோகின்றார்கள். அறிவாளிக்கு மதி பெரிது. முட்டாளுக்கு விதி பெரிது. விதி என்று எண்ணுகின்ற முட்டாள் கூடப் பிரார்த்தனை மூலம் 'விதியை மதியால் வெல்லலாம்' என்று எண்ணுகின்ற போது பிரார்த்தனை முயற்சிக்குத் துணை செய்கின்றது. தினமும் ஒரு குறிக்கோளை மனதில் வைத்து பிரார்த்தனை செய்கின்ற போது மூளையானது அதனை நிமிடந்தோறும் ஏற்று குறிக்கோளை அடைவதற்கான வழிவகைகளை அடைவதற்கு ஆயத்தங்களைச் செய்யும். எனவே பிரார்த்தனை வெற்றிக்கான வழிகளைக் காட்டிவிடும்.

இத்தனையும் சாதகமாக அமைகின்ற போது உடல்நிலையை ஓரங்கட்டிவிட்டால், உடல் ஆரோக்கியம் குன்றி உடலும் உள்ளமும் செயலிழந்து போகும். நமது பழக்கவழக்கங்கள் உடல் ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகின்றபோது ஆரோக்கியமும் குன்றுகின்றது. எடுக்கின்ற முயற்சியில் முழுக்கவனமும் செலுத்த முடியாமல் போகின்றது. எண்ணங்கள் சிதறடிக்கப்படுகின்றன. வெற்றி மூழ்கடிக்கப்படுகின்றது. எனவே நல்ல பழக்கவழக்கங்களை கைக்கொள்ளும்போது எடுத்த இலட்சியத்தில் வெற்றி காணலாம். இதைவிட எம்மை அறியாமலே எமக்கு ஏற்படுகின்ற நோய்கள் கூட வெற்றிப்பாதையில் தடைக்கல்லாக அமைகின்றன. அதற்கு மனம் என்ற அங்குசத்தை ஆளுகின்ற சக்தியை யாம் பெற்றுக் கொள்ள வேண்டும். கணனி உலகில் அப்பிள் நிறுவனத்தை உருவாக்கி குறுகிய காலப்பகுதியில் உலகப்பிரசித்தி பெற்ற ஸ்ரீவ் ஜாப்ஸ் (ளுவநஎந தழடிள) தன் உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாத காரணத்தினால், வெற்றிப்பாதையின் இடையிலேயே வாழ்க்கையை இழந்தார். உலகம் ஒப்பற்ற விஞ்ஞானியை இழந்தது. எனவே கண்ணுங்கருத்தும் வெற்றியை நோக்கியிருக்கும்போது சுகதேகியாக வாழவேண்டும் என்ற எண்ணமும் மனதில் மேலோங்கி நிற்க வேண்டும்.

எனவே இலக்கைத் தெரிவுசெய்யவேண்டும். அதன் முக்கியத்துவத்தை அறியவேண்டும். அந்த இலக்கை அடைய உறுதியாக இருக்க வேண்டும். அந்த இலக்கை அடைவதற்கான வரைபடத்தை மூளையில் வரைந்து வைத்திருக்க வேண்டும். அதில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். நம்பிக்கையில் சூழ்நிலை, பிரார்த்தனை, உடல்நிலை, முயற்சி போன்றவற்றை தெளிவான ஒழுங்குபடுத்தலுக்குள் கொண்டுவந்து முழுமனதையும் நமது இலக்கினுள் ஒருமுகப்படுத்தும்போது வாழ்க்கையில் 100 வீதம் வெற்றியை அடையலாம்.

கௌசி சோலிங்கன்<br>ஜேர்மனி<br>07.12.14

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்..

ப.பசுபதிராசா
ஜேர்மனி

அழகிய இந்த உலகம் பணக்காரர்களின் சொர்க்கபுரி. ஆதிக்க வர்க்கங்களின் அதிகாரபீடம். பணத்திற்கு வழியற்றவன் பிணத்திற்குச் சமம் என்னும் மறைமுகச் சட்டங்களால் முகம் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றது. இந்த அதிகார மட்டங்களின் அன்றாட அடாவடிதான் சாதாரண பொதுமக்களை விதியற்றவன் என்று விம்மி வீதிவழிபோக வழி சமைக்கின்றது இதை அழுத்தம் திருத்தமாக நாம் வாழும் மேற்குலக விவகாரங்கள் போக்குக் காட்டுகின்றன. அகதி என்ற போர்வையிலும் ஆதரவுக்கரங்கள் என்ற போர்வையிலும் வாழும் வெளிநாட்டவர்களை இனி இங்கு வாழ்ந்தது போதும் வெளியேறுங்கள் என்று அரசாங்கங்களைவிட மக்கள் பேரணி வசப்பட்டுத் தாமே கோசம் போடும் சர்வாதிகாரம் சர்வமயமாக்கப்பட்டு வருகின்றது.

ஒரு தாய்க்கும் சேய்க்கும் அன்பு எந்த மட்டிற்கு என்று பரிசோதிக்க நினைத்த ஆராய்ச்சியாளர்கள் ஒரு தொட்டிக்குள் தாய்க்குரங்கையும் சேய்க்குரங்கையும் விட்டுவிட்டு அதற்குள் படிப்படியாகத் தண்ணீரை நிரப்பினர். அச்சப்பட்டபடி தாய்க்குரங்கு சேய்க்குரங்கை தன் தலைக்குமேலே தூக்கிப்பிடித்தது. ஆனால் தண்ணீரால் மூடப்படும் நிலை வந்தும் சேய்க்குரங்கை தண்ணீருக்குள் அமுக்கி அதன்மேல் நின்று தன்னைக்காப்பாற்ற எத்தனித்ததாம்.

இதுபோல் தமது நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவரை வெறும் பார்வையாளர்களாக இருக்கும் மேலைநாட்டு மக்கள் தம்மீது பாதிப்பு ஏற்படும்போது அதிகாரத்தையே கையில் எடுக்க எத்தனிக்கின்றனர் என்பதனை "சார்லிகிப்டோ" என்னும் பாரிஸ் நகரில் இயங்கும் பத்திரிகைக் காரியாலயத்தின் மீதான இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பின் முற்றிலும் மாறுபட்டதோர் முகத்தினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் உலகின் நிம்மதியை அழிக்கும் ஆயுதத்தினை தமது பெரும் இலாபம் ஈட்டும் நோக்கோடு மரண வியாபாரம் செய்யும் முதலாளித்துவ ஒடுக்கு வழிவு அரசுகள் தாமும் தமது மக்களும் எந்தவித பாதிப்புமின்றி இருந்துவிடவே நினைக்கின்றன.

ஆனால் ஆபத்தைத் தந்தவனுக்கே அதைப்பரிசளி என்னும் எதிர்வாதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு இலாமியத் தீவிரவாதிகள் இந்த முதலாளித்துவக் கட்டமைப்புக்கள்மீது தொடுக்கும் போர் இன்று நேற்று அல்ல மிக நீண்டகாலமாகவே தொடர்ந்துகொண்டு இருக்கின்றன. உண்மையில் இந்தத்தீவிரவாதம் சரியில்லை என்று ஒரு பக்கம் கூறிக்கொண்டாலும் இந்த உலகை ஆயுதங்கள் செய்து அழித்துவிளையாடும் இந்த ஏகாதிபத்திய மேலாண்மைகளை மறைமுகமாகத் தட்டிக்கேட்கின்ற உரிமைகளை இஸ்லாமியத் தீவிரவாதங்கள்தான் செய்கின்றனர். மிகமோசமான அழிவுகளுக்குரிய நஞ்சு இரசாயன ஆயுதங்களை ஈராக்கிற்கு மறைமுகமாக விற்றுப் பெரும் செல்வம்கொண்ட ஜேர்மனி அதை ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் குசேன் குர்திஸ் மக்கள்மீது பயன்படுத்தியபோது பேசாமல் இருந்துவிட்டுப் பின்பு அமெரிக்காவுக்கும் ஈராக்கிற்கும் ஏற்பட்ட போரின்போது எங்கே அதைத் தமக்கு எதிராகப் பயன்படுத்திவிடுவாரோ என்ற பயம் பீடிக்க ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் உண்டு என்பதை உறுதிசெய்தது ஜேர்மனி.

உலகில் எங்கெல்லாம் முரண்பாடுகள் இருக்கின்றன எனக்கண்டறிந்து அவர்களின் சமாதான நீதவான் என்ற போர்வையில் அங்கு இணக்கப்பாடு செய்வதாகச் சென்று ஆயுதங்களையும் முரண்பாடுகளையும் முற்றி வெடிக்கவைத்து அந்த அடிபாட்டில் உயர்வுகாணும் அமெரிக்கா இதுவரை உலகநாடுகளின் எந்த எதிர்ப்பும் இல்லாமல் சக்கரவர்த்தியாக நடமாடி வந்ததை 2001 செப்டெம்பர் 11 அவலத்தைத் தேடுபவனே அவலம் என்ன என்பதனை அறியும் நாளாக அமைந்தது. எப்பொழுதும் வெள்ளை இனத்தவரின் அதுவும் அமெரிக்க மக்களின் இரத்தப்பசி என்று எண்ணுவதில் எந்த அரசியல் வாதிகளுக்கும் முரண்பாடு கிடையாது.

இந்த முஸ்லீம் தீவிரவாதிகளை அடக்க மேற்குலக அரசுகள் அதிரடி நடவடிக்கைகள் எடுக்கும் இந்நேரம் மேற்கு நாடுகளில் இருக்கும் ஊடகங்கள் வெகுஜனத்தொடர்புச்சாதனங்கள் இவர்களைக் கிண்டல் கேலி பண்ணுவதையும் இஸ்லாமியக் கலாச்சாரம் பண்பாடுகள்மீது தேவையற்ற தலையீடுகளையும் செய்கின்றன. குறிப்பாக பாரிசின் சார்லி பத்திரிகை இஸ்லாமியத் தீவிரவாதிகளை விமர்சிப்பதில் என்றுமே சலிக்காதது காட்டுண் வரைபடங்களைப் பார்த்தால் எந்த மனிதனுக்கும் கோபம் வரும் நிலை

காணப்படும்போது இஸ்லாமியத் தீவிரவாதிகள் சும்மா இருப்பார்களா?.. இந்தவிமர்சனப் போக்குகளை பல நடுநிலை ஏடுகள் நட்புடன் பகிர்ந்துகொண்டபோதும் சார்லி பத்திரிகை இதை தனிநபர் தைரியமாகத்தான் பார்த்தது. ஜேர்மன் "பில்ட்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர்கூட பலமுறை இப்படிப்பட்ட கடும் விமர்சனப்போக்கைக் கைவிடுமாறு நட்புடன் வேண்டிய போது சார்லி சொன்ன வார்த்தைகள் இவை " எனக்கென்ன மனைவியா... பிள்ளையா... எனக்கு என்னவேண்டும் என்றாலும் ஆகட்டும் ஆனால் இந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் முன்னால் என்னால் மண்டியிடமுடியாது என்றாராம். இரண்டு பென்சில்களை நட்டுவைக்க அந்தக்கூர்ப் பென்சில்களை விமானம் வந்து தாக்குவது போல் அமைத்த அவரது கார்டுண் றொம்பப் பிரபலம். இதுவும் 2001 செப்டெம்பர் இரட்டைக்கோபுரத்தாக்குதலை நினைவுபடுத்தும் ஒன்று.

அப்பத்திரிகைமீதான தாக்குதல் ஒரு எழுத்தாளன் ஆன என்னையே மிரள வைத்தது. இது பத்திரிகைத் தர்மத்திற்கு விடப்பட்ட மிகப்பெரும் சவால் எனக்கீழ்த்துருவ நாடான கனடாவரை கண்டன அறிக்கைகளும் காரசாரமான குரல்களும் அனைத்து ஊடகங்களிலும் எதிரொலித்த வண்ணமே இருந்தன. உடனடியாக ஒரு தனி மனிதக்கொலையை சர்வதேச முதலாளித்துவ ஒடுக்குமுறை வடிவங்களில் விழுந்த அடியாகவும் நினைத்த அனைத்துலக முதலாளித்துவ அரச தகவல்கள் தமது நாடுகளின் முக்கிய செயற்பாடுகளையே நிறுத்திவிட்டு பாரிஸ் நகரில் இறங்கி அனைத்துத் தலைவர்களும் இரண்டு கைகளையும் இணைத்தவண்ணம் இரண்டு கிலோமீட்டர் தூரம் நடந்து தமது எதிர்ப்புணர்வைப் பதிவு செய்தனர் கூடவே பெரும் திரளான மக்களும் பல்வேறுவகையான வாசகங்கள் தொங்கும் பதாதைகளையும் சுமந்து சென்றனர்.

தம்மேல் விமர்சனப்போக்கைக்கொண்டபத்திரிகைக் காரியாலயத்தைத் தாக்கிய தீவிரவாதிகள் தமது நீண்டகால எதிரியாகப் பாரிசில் வாழ்ந்துகொண்டிருக்கும் யூதமக்கள்மீதும் தாக்குதலை மேற்கொண்டு உயிர்க்கொலை செய்ததுடன் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். அத்தாக்குதல் நடந்த தேநீர் விடுதியில் இன்னும் பல யூத உயிர்கள் போகாமல் தடுத்துக் காத்தவர் இஸ்லாமிய மதத்தை தழுவிய ஒரு ஆபிரிக்கக் குடிமகன் என்பதும் அனைவராலும் மெச்சப்பட்டதே.

எல்லா மதங்களும் நல்லவற்றைத்தான் பிரசவிக்கின்றன.. அதைத் தமது தீவிர விசுவாசிகளாகக்காண நினைப்போரால்தான் இத்தனைபெரிய இடர்கள் வந்து சேர்கின்றன. இஸ்லாமியக் கலாச்சாரம் பண்பாடு நீண்டகாலப் பாரம்பரியத்தைக்கொண்டது. மதம் மட்டுமல்ல அடையாளங்களையும் சுமந்து நிற்கிறார்கள். குறிப்பாகப் பெண்கள் அணியும் மொட்டாக்கு என்பது இந்த மேற்குலகில் படாதபாடு படுத்துகின்றது. மேற்குலக நாடுகளில் இந்த மொட்டாக்கு விவகாரம் சட்டச் சிக்கல்களில் சிக்குண்டு கிடக்கின்றது. இவை மட்டுமல்லாமல் பள்ளிவாசல்கள் அமைப்பதிலும் இந்த மேற்குலக நாடுகள் பல எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றன..

முதலாளித்துவ மேற்குலக ஆதிக்க வடிவங்கள் அனைத்தும் இஸ்லாமியர்களை என்றும் தமது பகைவர்களாகவே நோக்குகின்றன. ஏனெனில் தெரிந்தோ..தெரியாமலே உலகை ஆட்டிப்படைக்கும் எண்ணெய் வளத்தை இயற்கை இவர்களிடமே விட்டுவிட்டது. இவர்களின் குளங்களைக் கலக்கி மீன் பிடிப்பதிலேயே கண்ணாயிருக்கிறார்கள். இன்று அரபு உலகையே பெரும் அவலத்திற்கு உள்ளாக்கியிருக்கும் ஐ.எஸ்.எஸ் தீவிரவாதம் மொத்த உலகையே திகிலடைய வைத்துள்ளது. இத்தீவிரவாதிகளின் நோக்கம் ஈராக், சிரியா, ஜோடான், துருக்கி நாடுகளை இணைத்து இஸ்லாமிய இராச்சியம் காண்பதே.

இந்த அமைப்பில் பல மேலத்தேச நாடுகளின் சிலரும் இணைந்து போராடுகிறார்கள் என்பதும் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இவர்களின் பிடியில் அகப்படும் மேற்குலத்தவர்களும் சித்திரவதை கொலைகளுக்கு உட்படுத்தப்படுவது மனிதநேயத்திற்கு எதிரானவையே. இந்தத் தீவிரவாதம் வளர ஆயுதங்களை விற்பனைசெய்த மேற்குலகநாடுகளே இன்று கொடுத்த கம்பால் அடிவேண்டும் அவலத்தைச் சுமக்கின்றனர். என்றைக்கும் இந்த இயற்கை தனது இயல்புக்கு மாறாகச் செயற்படுவோரை மன்னிக்காது. அதன் உத்திர தாண்டவம் இயற்கையாக வரும் இல்லை செயற்கையாகவும் வரும் என்பது மட்டும் உறுதி!...

## வாசகர் கடிதம்...

(1)

வணக்கம் மண்சஞ்சிகை ஆசிரியர் அவர்களே வெள்ளி விழாவென்னும் வெற்றிசரிதம் ஒன்றை எழுத்துப்பணியில் நிறைவேற்றி களைப்புற்றிருக்கும் உங்களுக்கு மனம்நெகிழ்ந்த நன்றிகள்.

தடையும் தளர்வும் வரும் போதும் முயற்சியும் விடாமுயற்சியும் கொண்டுழைத்து தன்னார்வம் மிக்க குடும்பப்பலத்துடன் சங்கமமாக்கிய மாபெரும் பணியிது அனைத்து வகையிலும் உறுதுணைபுரிந்த உங்கள் குடும்பத்தினருக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும், எழுத்தாளர் சங்க அமைப்பாளர்கள் அனைவருக்கும், விழாவெற்றி பெற உழைத்த வள்ளல்கள், வர்த்தகப்பெருந்தகைகள், விழாச்சிறப்பிப்பாளர்கள், நன்கொடையாளர்கள், மனிதநேயப்பங்காளர்கள், நிகழ்வுகளை தந்து நிறைந்த அரங்கத்தில் குழமியிருந்து உற்சாகம் தந்த அனைத்து தமிழ்மொழிப்பற்றாளர்கள் அனைவரையும் அன்பின்நெகிழ்வில் ஒன்றிணைப்பாக்கும் பிரதம ஆசானின் தன்னடக்கபணி மகுடத்தின் சிறப்பிக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகள் பல்கோடி.

வளரும் இதழும் வார்ப்பின் உச்சமும் நிகழும் மனிதநேயப்பற்றும் நிமிரும் வாழ்வின் நிஜங்களே. எழதும் கரங்களால் ஏற்றம் பெற்றோம். எழதும் பணியில் உற்சாகம் அடைந்தோம். ஒயாது அருவிபோல் பேனா காயாது தீட்டும் தமிழக்கு நீங்களும் ஆசானே. இதயத்து நன்றிகள் கோடி. வளரட்டும் சேவையின் உச்சம். வாழ்த்துக்கள்.மண்ணிதழே வருங்காலம் உன்னிழலே. நன்றி'..

திருமதி வசந்தா ஜெகதீசன்
ஜேர்மனி.

(2)

எந்த இடம் வந்தபோதும் கொண்ட கொள்கையில் மாற்றம் ஏதும் இல்லாமல் தொடர்ந்தும் தன் சிறப்பான பணியால் பல தமிழர்களின் மனங்களிலும் இடம்பிடித்தது மட்டுமல்லாது..எமது தாயகத்தில் அல்லல்ப்பட்டோர் துயர் துடைப்பில் பரிவுகாட்டி உதவிக்கரம் கொடுக்கும் மண் சஞ்சிகை வெள்ளிவிழா கொண்டாடியதை எண்ணி மிக்க மகிழ்வுடன் எங்கள் குடும்பம் சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.. இன்னும் பல்லாண்டுகள் எம் மண்ணின் வாசம் மண் சஞ்சிகை மூலம் புலம்பெயர் நாடுகளில் பரவவேண்டுமென வாழ்த்துகிறோம்.....

நவரட்ணம் குடும்பம்.

## நலமாய்வாழ!.. நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்!....

(மேழிக்குமரன் - வவுனியா)

### மனதிற்கு சாந்தத்தைக் கொடுக்கும் அவரைக்காய்.

இன்று காய்கறிகள், கனிகள் கீரைகள் எல்லாம் இரசாயன உரமிட்டு வளர்க்கப்பட்டு சந்தைகளில் விற்கப்படுகிறது. அவை சில நேரங்களில் உடலில் நச்சுத்தன்மையை உண்டாக்குகிறது. வீடுகளில் எளிதாக வளர்க்கப்படும் அவரைக்காய் பற்றி தெரிந்து கொள்வோம்.
அவரைக்காயில் பிஞ்சுக்காயே அதிக அளவில் உணவாகச் சேர்க்கப்படுகிறது. நல்ல சுவையைக் கொண்டது.

அவரைப் பிஞ்சுகளை எடுத்து நறுக்கி அதனுடன் சின்னவெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்து வதக்கி உணவில் சேர்த்துக்கொண்டால் உடல் வலுப்பெறும். எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்டதால் இதன் சத்துக்கள் விரைவில் உடலில் சேரும். இதில் சுண்ணாம்புச்சத்து, வைட்டமின்கள் இருப்பதால் இளைத்த உடல் தேறும்.

நோய்க்கு மருந்துண்ணும் காலங்களிலும், விரதம் இருக்கும் காலங்களிலும் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொள்ளலாம். இது உடலுக்கு வலுவைக் கொடுப்பதுடன் விரத மன அமைதியைப் பெருக்கவும் உதவும். சிந்தனையைத் தெளிவுபடுத்தும்.
காமச்சிந்தனை, அதீத சிந்தனை, கோபம், எரிச்சல், இவற்றைப் போக்கும். உடலுக்கும், மனதிற்கும் சாந்தத்தைக் கொடுக்க வல்லது.

பித்தத்தினால் உண்டாகும் கண்சூடு, கண்பார்வை மங்கல் போன்ற கண் பாதிப்புகளுக்கு அவரைக்காய் பிஞ்சு வாரம் இருமுறை சமைத்து உண்டுவந்தால் பித்தம் குறைந்து கண் நரம்புகள் குளிர்ச்சியடைந்து மங்கிய பார்வை தெளிவடையும். அவரைக்காயை அதிகம் உண்டுவந்தால் வெள்ளெழுத்து குறைபாடுகள் நீங்கும். அவரைப் பிஞ்சில் துவர்ப்புச் சுவை உள்ளதால் இது இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். இரத்த நாளங்களில் உள்ள கொழுப்பைக் குறைக்கும். இரத்த அழுத்தம், இதயநோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது.

அதுபோல் சர்க்கரை நோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொண்டால், நீரிழிவு நோயால் உண்டாகும் மயக்கம், தலைச்சுற்றல், கை, கால் மரத்துப்போதல் போன்றவை மட்டுப்படும்.

மலச்சிக்கலைப் போக்கும், வயிற்றுப் பொருமலை நீக்கும். மூலநோய் தாக்கம் உள்ளவர்கள் அவரைக்காயை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது.

சிறுநீரைப் பெருக்கும், சளி, இருமலைப் போக்கும், உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும், சருமத்தில் உண்டாகும் பாதிப்புகளைக் குறைக்கும், இரவு உணவில் அவரைக்காய் சேர்த்துக் கொண்டால் சுகமான நித்திரை கிடைக்கும். முற்றிய அவரைக்காயை உணவாக சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக முற்றிய அவரைக்காய், முற்றிய வெண்டைக்காய் போன்றவற்றை சேர்த்து சூப் செய்து அருந்தினால் உடல் பலமடையும். ஆண்மை சக்தி அதிகரிக்கும். நினைவாற்றலைத் தூண்டும். முதுமையில் உண்டாகும் நோயின் தன்மையை அவரைப் பிஞ்சு மாற்றும். தசை நார்களை வலுப்படுத்தும்.

## நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பூக்கோவா

Blumenkohl

நாம் சமையலுக்கு பயன்படுத்தும் காலி∴ப்ளவர் எண்ணற்ற மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. இந்த பூக்களில் மாவுச்சத்து, உயிர்ச்சத்து, சிறிதளவு கால்சியம், சோடியம், கொழுப்பு ஆகியவை காணப்படுகின்றன. இந்த பூவில் கண்பார்வைக்குத் தேவையான கரோட்டின் சத்து அதிகம் உள்ளது. இதனை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் ஆண்டி ஆக்ஸிடேசன் அதிகம் உள்ளது. வைட்டமின் சி, மாங்கனீஸ 'யம் உட்பட பல்வேறு சத்துக்களும் காணப்படுகின்றன. மேலும் பீட்டா கரோட்டீன் போன்றவையும் உள்ள சத்தான உணவாகும்.

இதன் மூலம் மன அழுத்தம், இதய நோய்களும் குணமாகும். புற்றுநோய் செல்களையும் கட்டுப்படுத்துகிறது. காலி∴ப்ளவரில் வைட்டமின் கே, மற்றும் ஒமேகா 3 சத்துக்கள் உள்ளன. இதை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும். இதில் நார்ச்சத்து காணப்படுவதால் ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. வயிறுக்கு இதமளித்து வயிறு தொடர்புடைய நோய்களை குணமாக்குகிறது. அல்சர் மற்றும் குடல் புற்றுநோயையும் கட்டுப்படுத்துகிறது.

# பாவற்காய்......

இன்று நான் சமைத்த பாவற்காய் கறி கசப்பு தன்மைக்குப் பதிலாக இனிப்பாக இருந்தது ஒரு அதிசயமாக எனக்கு இருந்திச்சு, நான் சீனியோ, இளநீரோ எதுவுமே சேர்கவில்லை வழமை போலவே சமைத்த போதும் ஏன் இனிப்புச் சுவை வந்தது என்பது எனக்கு புரியவில்லை, ஒரு வேளை தோட்டக்காரன் இந்த பாவற்செடியை உரத்துக்கு பதிலாகச் சீனி போட்டு வளர்தானோ தெரியவில்லை, இப்படி நினைத்த போது உண்மையாக நடந்த ஒரு சம்பவம்தான் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.

ஒருத்தருக்கு சரியான சுகர் வருத்தம் (Diabetic) அந்த நோய்க்கு பாவற்காய் நல்ல கை வைத்தியம் என்பதால், அவரது படிப்பறிவு இல்லாத மனைவி அவருக்குத் தினமும் பாவற்காயிலை யூஸ் அடிச்சு காலை மாலை கொடுப்பதுடன், தினமும் பாவற்காயில் கறி வேறு சமைத்துக் கொடுத்து வந்தா, அவவுக்கு தனது கணவர் பாவற்காய் சாப்பிட்டு வந்தால் வருத்தம் குறைந்து சுகமாகி விடுவார் என்பதுதான் தெரிந்ததே ஒளிய அந்த நோய்க்கான காரணங்கள் எதுவுமே தெரியாது அந்தச் சுகர் வருத்தம் ஏன் வருகுது என்பது பற்றி விளங்கக்கூடிய அறிவும் அவருக்கு இல்லை.அதனால் அவர் காலை மாலை பாவற்காய் யூஸ் சரிகட்டும் போது பாவம் கணவர் குடிக்க கசப்பு இல்லாமல் இருக்க வேணும் என்று நினைத்து சீனியை பாவற்காயுடன் கலந்து மெசினில் அடித்து யூஸ் செய்து கொடுத்தார், அத்துடன் மதியம் பாவற்காய் கறி வைக்கும் போதும் ஒரு பிடி சீனியை போட்டுதான் சமைத்து வந்தா, அவருக்கு தெரிந்தது பாவற்காய் சுகர் வருத்ததுக்கு நல்லது என்பதும், கணவர் அதை சாப்பிட வேணும் என்பதும்தான்.

எனக்கு கூட அவ ஒருநாள் சொன்னா பிள்ளை சுகர் வருத்தம் இருந்தால் பாவற்காய் யூஸ் செய்து குடிக்க கெதியிலை சுகம் வரும் என்று, இப்படியே அவர் தான் தன் கணவருக்குத் தினமும் பாவற்காயும் சேர்த்துக் கொடுப்பதாக சொல்லி பெருமை பட்டு கொண்டே வந்தார் ஆனால் யாருக்கும் தெரியாது அவர் சீனியும் நல்லா கலந்தே அவருக்கு கொடுத்து வந்த கதை, கடைசியிலே அவரது கணவருக்கு சுகர் வருத்தம் கூடிக் கூடி ஒரு நாள் கை கால் எல்லாம் இழத்து நாலு வருடம் படுக்கையிலை கிடந்து

அவர் மாண்டும் விட்டார்.இதைதான் அறியாமை என்று சொல்வது வயதில் மூத்தவர் ஆனபடியால் யாரும் அவர் தப்பு பண்ணியிருப்பார் என்று பிள்ளைகள் கூட அவரை எப்படி சமைக்கிறார், எப்படி யூஸ் செய்கிறார் என்று கேட்கவும் இல்லை, இதைதான் சொல்வது கேள்விச் செவியன் ஊரை கெடுப்பான் என்று பாவற்காய் நோய்க்கு மருந்து என்று மட்டுமே கேட்டு விட்டு அந்த நோயைப் பற்றி அறியாமல் போனது முட்டாள்கள் செயல். ஆனால் பாவற்காய் உண்மையாகவே சுகர் வருத்தக்காரர் சாப்பிட வேண்டியது அவசியமே அது இரத்தில் உள்ள இன்சுலின் அளவை கூட்டி சுகரை கட்டுப்பாட்டில் வைக்க உதவுகிறது

காய்ந்த பாவற்காய் சீவல்களாக பக்கற்றில் விக்கிறார்கள் அதை வாங்கி சுடு நீரில் ஊறவைத்து அந்த சாற்றையும் குடிக்கலாம் அல்லது பாவற்காய் கறி சமைத்து குத்தரிசி சோற்றுடன் சேர்த்து சாப்பிடலாம். பாவற்காய் கசக்கும் என்பதற்காக சீனியை சேர்க்கக்கூடாது ஆனால் சுகர் வருத்தம் உள்ளவர்கள் இனிப்பே சாப்பிட கூடாது என்பது சட்டம் இல்லை குளுக்கோஸ் இனிப்புக்களை அவர்கள் கைவசம் கொண்டே திரிய வேணும் சுகர் குறைந்து கை நடுங்கி களைப்பு வரும் போது கண்டிப்பாக சீனியோ குளுக்கோசோ அவர்கள் சாப்பிட்டால்தான் உயிர் பிழைக்க முடியும்.ஊரில் உள்ளவர்களுக்கு பாவற்காய் தினமும் கிடைக்கும் இங்குள்ளுவர்களுக்கு அருமையாக தான் கிடைக்கும், கிடைக்கும் போதெல்லாம் வாங்கிச் சாப்பிட்டால் உடல் நலத்துக்கு மிகவும் நல்லது.

ஊரில் இருக்கும் போது எங்க வீட்டிலை எனது சகோதரன் செய்யும் வீட்டுத் தோட்டத்தில் பாவற்காய், பிசுக்கங்காய், புடலங்காய் என எல்லாமே காய்ச்சு த்தொங்கியது அதை காணும் போது ஒரு தனியான மகிழ்ச்சி ஏற்படும். நாமாக தோட்டம் வைத்து அதில் காய்களோ பூக்களோ வரும் போது அதை ரசிப்பதில் கூட பெரும் இன்பம் உண்டு, அதை எல்லாம் அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் புரியும், அதனால்தான் சொல்கிறேன் முடிந்தால் பாவற்கொடியைப் பயிர் செய்யுங்கள் செடி வளர்ந்து மஞ்சள் நிறப் பூக்களைத் தந்து காய்க்கும் போது ரசியுங்கள் பின்னர் பாவற்காயைச் சுவையுங்கள். மனதிற்கும் மகிழ்ச்சி தரும்.. உடலுக்கும் நன்மை தரும் பாவற்செடி..

கவி மீனா
ஜேர்மனி

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு-145

## (பங்குனி - சித்திரை - 2015)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | க | ளி | ர் | தி | ன | ம் |
| ன் | ண | ர் | க | த் | தி | ட |
| னா | ரை | தி | த் | சி | லை | ட் |
| ர் | வ | ளு | ள் | வ | ரு | தி |
| த | ட் | ட | ம் | ட | ரி | ரு |
| த் | ட | ம் | ர | க | ந | ட் |
| பு | ம் | பா | கா | ம் | தி | டு |

போட்டியில் கலந்துகொண்டவர்களும். பரிசு பெறுபவரும்.

திருமதி.ஜெயா.நடேசன் - Havixbeck
திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா - Weeze
திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg
திருமதி.சக்தி சிறீனிசங்கர் - Mönchengladbach
திருமதி.நளினி சண்முகநாதன் - Denmark
திரு.தி.தேவானந்தராசா - Möchengladbach

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும்வாழ்த்துக்களும்...
அதிஸ்டசாலியாகத் தெரிவுசெய்யப்பட்டு பரிசுபெறுபவர்..

திருமதி நளினி சண்முகநாதன்
Denmark

## கண்!.

கண்ணால் தெரியாத கடவுளுக்கு உதவுவதைவிட கண்ணால் தெரியும் ஏழைகளுக்கும், இலயாதவர்க்கும் உதவுவதே மனிதனின் முதல்கடமையாகும்!.

# குறுக்கெழுத்துப் போட்டி -146
## (வைகாசி - ஆனி - 2015)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-06 நம் பிறந்த தேசத்தின் விடிவிற்கு இது எப்போ கிடைக்கும்

09-12 மனித மனத்தை இந்த மிருகத்திற்கும் சிலர் ஒப்பிடுவர்

18-20 நலிந்தோருக்கு இது கொடுப்போம் ஒத்தசொல்

31-34 யாழ்ப்பாணத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்

47-49 இலக்கியத்தில் ஒருத்தி

வ-இ:-

14-12 கோவிலிலும் இருக்கும் நீர் நிலைகளிலும் இருக்கும் பொருள்

18-15 கிழக்குமாகாணத்தில் ஒரு ஊர்

28-25 வாசனை தரும் உணவுப்பொருள்

31-30 நொந்து நோதல் இதுவாகக் கிழிபடுவர் என்பார்கள்

35-34 விருட்சமாக வளர இப்பகுதி பலமாக இருக்க வேண்டும்

42-40 பணம் பரிமாறும் இடம் (கு)

கீ-மே:-

23-16 சந்திரனை இப்படியும் அழைப்பார்கள்

28-07 சிலரது உடலில் சில உறுப்புக்களில் இதுவும் காணப்படும்

29-22 முக்கனிகளில் ஒன்று

31-17 நம் நாட்டில் ஒரு பழமரம்.

44-30 காட்டுவாசிகளை இப்படியும் அழைப்பார்கள்

மே-கீ:-

01-22 பொழுதுபோக்கு நிகழ்வு என்றும் கூறலாம்

04-25 வார நாட்களில் ஒன்று

18-39 களவெடுப்பவளின் எதிர்பாற்சொல்

26-47 பரதநாட்டியத்தில் இப்பொருளும் முக்கிய பங்குபெறுகின்றது

29-43 துணிவகைகளில் ஒன்று

31-45 புல் இனங்களில் ஒன்று

32-46 இலங்கையில் வெப்பம்கூடிய பிரதேசம்

**முடிவுதிகதி: 30-06-2015**

# எழுச்சி கண்ட அரங்கேற்றம்

(சிறப்புப் பார்வை – திருமதி கலைவாணிஏகானந்தராஜா)
சங்கீத ஆசிரியர்

Germany-Elsdorf நகரத்தைச் சேர்ந்த திரு.திருமதி சிவராஜா தம்பதிகளின் செல்வப் புதல்வனும், கேர்ப்பன் இராஜேஸ் நர்தனாலய ஆசிரியர் பரதசூடாமணி, கலாவித்தகர் திருமதி துஷ்யந்தி. ஜெகதீஸ்வரனின் மாணவனுமாகிய (நாட்டிய கலாஜோதி) செல்வன்.தனுசன் சிவராஜாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் மே மாதம் 09.05.2015 அன்று Kerpen Jahn Halle மண்டபம் நிறைந்த பார்வையாளர் மத்தியில் மிக சிறப்பாக நடந்தேறியது.

சரியாக 4 மணிக்கு நான் அங்கு சமுகமளித்த போது வாசலிலேயே என்னை வழிமறித்து செல்வன் தனுசன் அரங்கேற்றம் பற்றிய எனது எதிர்பார்ப்பை பற்றிக் கூறும்படி சிறிய பேட்டி ஒன்றைப் பதிவு செய்திருந்தனர். அங்கு நான் தெரிவித்தது போன்றே தனுசனின் அரங்கேற்றம் மிக நேர்த்தியாக அமைந்திருந்தது. 4 மணி 30 நிமிடமளவில் பூஜையை சுவாமிநாத சர்மா அவர்கள் முறைப்படி நிழ்த்தினார். இறைவணக்கத்தைத் தொடர்ந்து செல்வன் தனுசன் குருவினதும் பெற்றோரதும் ஆசிகளை பெற்றுக் கொண்டார்.

தந்தையின் வரவேற்புரையைத் தொடர்ந்து அறிவிப்பாளர்கள் அறிமுகம் நடைபெற்றது. அறிவிப்புத் திலகம் சிம்மக்குரலோன் எல். வலன்ரைன் தமிழ் அறிவிப்பாளராகவும் செல்வி வேதிகா. ஜெகதீசன் டொச்மொழி அறிவிப்பாளராகவும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் வேதிகா.ஜெகதீசனின் 50 ஆவது மேடை அறிவிப்பை பாராட்டி 'வான் குயில்' என்னும் பட்டத்தைக் கொடுத்து பாராட்டு பத்திரமும் அளிக்கப்பட்டது. வேதிகா. ஜெகதீசன் லண்டன் தமிழ் வானொலி, பாமுகத்தினூடாக வளர்ந்த அறிவிப்பாளர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

மதுரக்குரலோன் கண்ணன் அவர்களின் குரலில் கருணைக் கடலே கண்பார் எனும் விநாயகர் துதியுடன் நிகழ்வு ஆரம்பமானது. மல்லாரி என்பது மல் ஆரி- கூத்து இசைத்தல் ஆகும். முதலாவதாக கம்பீரநாட்டை இராகத்தில் மல்லாரியை நாதஸ்வரத்தில் இன்னிசை செல்வன் என்.கே ரகுராமன் இனிமையாய் வாசிக்க தவில் வித்வான் கே.பி.கேசவன் கண்ட திருபுடை தாளமிசைக்க, தனுசன் கால்கள் ஜதியுடன் இணைந்தன.தேவாரப் பண் நாதஸ்வரத்தில் இசைக்கப்பட்டபோது தனுசன் பக்திப் பரவசத்தில் அனுபவித்து ஆடினார். அடுத்து அலாரிப்பில் நுழைந்தபோது தனுசனிடம் சற்று பதட்டம் தெரிந்தது. அலாரிப்பு ஒரு ஆயத்த உருப்படியாகும். உடல் சூடுபிடிக்க ஆடப்படும் இந்நடனம் மிஸ்ரசாப்பில் அமைந்திருந்தது.

தனுசனின் கண்கள் புருவங்கள் தோள்கள் பாதங்கள் கால்கள் ஒருங்கே அசைய மூன்று காலப்பிரமானத்திலும் ஐந்து ஜதிகளையும் இணைத்து மிகச் சிறப்பாக ஆடியிருந்தார். தொடர்ந்து ஆடிய ஜதிஸ்வரம் ஒரு சுத்த நிருத்திய உருப்படியாகும். கல்யாணி ராகத்தில் அமைந்த ஜதிஸ்வரத்தை ஆசிரியரின் உற்சாகமான குரலில் ஜதி ஒலிக்க அரங்கேற்ற நாயகன் பல அபிநயங்களைச்செய்து விறுவிறுப்பாக ஆடி சபையோரின் பலத்த கரகோசத்தைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்து ஒரு அரங்கேற்றத்தின் முக்கிய அம்சமான வர்ணம். நாட்டைக்குறிஞ்சி ராகத்தில் அமைந்த அழகான இந்த பதவர்ணம் நிறைவாக நாயகா நாயகி பாவங்கள் நிறைந்தது. அரங்கநாயகன் தனுசன் பல்லவியில் மட்டும் பத்து நிமிடங்கள் கண்ணப்பநாயனார் கதையை அபிநயித்து ஆடியதுடன் பல்லவி அனுபல்லவி சரணம் போன்ற ஒவ்வொரு அங்கங்களிலும் நிறைவான சஞ்சாரி பாவங்களை அபிநயித்து ஆடியிருந்தார். ஸ்வரக்கோர்வைகள் அனைத்தும் தாளப் பிடிப்புடன் அமைந்திருந்தது. ஒவ்வொரு அங்கங்களின் முடிவிலும் தட்டுமெட்டு ஐந்து ஜதிகளிலும் அமைந்திருந்தது. வர்ணத்தை தனுசன் 40 நிமிடங்கள் சளைக்காமல் ஆடி சாதனை படைத்துள்ளார். நடன அமைப்பு முறைக்கு ஆசிரியை துஷ்யந்திக்கு ஒரு ஓ போடலாம்.

இவரது இந்த சாதனையின் பெரும் பங்கு ஆசிரியை துஷ்யந்திக்கு உரியதாகும்.ஆயினும் இதில் சமபங்கு மிருதங்கவித்வான் எஸ் பிரணவநாதனுக்கும் உண்டு என்பதே உண்மை. ஆசிரியர் துஷ்யந்தியின் ஜதியும் தாளமும் மிருதங்க வித்வானின் வாசிப்புடன் போட்டி போட அங்கு மிருதங்க ஜதிகளே அரங்கேற்றச் செல்வனுக்கு மிக ஒத்துழைப்பும் உற்சாகத்தையும் கொடுத்ததை கலைஞர்களால் உணரமுடிந்தது. தனுசன் அதற்கு ஈடு கொடுத்து ஆடினார். அதேபோல் வர்ணத்தின் பாவம் மிளிர பாடல் தான் முக்கியமானதாகும். இவ் அரங்கேற்றத்தில் கண்ணன் அவர்கள் மிக அற்புதமாகவே ஒத்துழைத்துப் பாடியிருந்தார். பக்கவாத்தியமாக நெய்வேலி எஸ் ராதாகிருஷ்ணனின் வயலின் இசையும் பாவங்களை வெளிப்படுத்த மிக சிறப்பாக கை கொடுத்ததை அவதானிக்க முடிந்தது. சபையோர் ஏகோபித்த பாராட்டுகளை கைதட்டி ஆரவாரித்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அடுத்த இதழில் தொடரும்.


# புலம்பெயர்வில்இளைஞர்கள்புரியும் சாதனைகள்

அண்மையில் என் மனதை வருடிய நிகழ்வொன்றை உங்கள் முன்னிலையில் கொண்டு வருகின்றேன். காலம் தமிழனை திசை மாறி, கண்டம் மாறி ஓடச் செய்தாலும் தமிழன், செல்லும் இடமெங்கும் தன் திறமையை வெளிக் கொண்டுவந்து தலைநிமிர்ந்து நிற்பான். இதற்கு எடுத்துக்கட்டாக புலம்பெயர்ந்த இளஞ்சந்ததியினர் உலகளாவிய ரீதியிலே புரிகின்ற சாதனைகள் சிறப்பாக அமைகின்றன.

ஜேர்மனிய Geldern நகரிலே நடைபெற்ற பாடசாலை மாணவர்கள் நடத்திய நிகழ்வொன்று என் நெஞ்சத்தை நெருடியது. சிறந்த நெறியாள்கையில் பாடசாலை மாணவர்கள் ஒன்றிணைந்து நடத்திய ஒரு நாடகம். இந்நாடகத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த ராம் பரமானந்தன் என்னும் இளைஞன், தன் குரலாலும் நடிப்பாலும் பலரைக் கவர்ந்திழுத்தார். முற்று முழுதாக ஜேர்மனிய கலாச்சார நாட்டிய நாடக அமைப்பில் பாடல்களாலும் வசனங்களாலும் அமைந்திருந்த இந்த நாடகத்திற்கான பயிற்சி சுமார் ஒரு வருடமாக நடைபெற்றது. குரல்ப்பயிற்சி, உணவுக்கட்டுப்பாடு, ஆடை அலங்காரம் என இதற்கான தயாரிப்பு அற்புதமாக நடைபெற்றது. 40 மாணவர்களில் இப்பாத்திரத்திற்காக ராம் பரமானந்தன் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இவருக்காக மட்டும் 11 பேர் ஆடை, அலங்காரம், ஒலி, ஒளி போன்ற அனைத்து விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தமை சிறப்பு வாய்ந்த விடயமாகும். இவர் கர்நாடக இசையையும் கற்று டிப்ளோமா தேர்வில் வெற்றியீட்டியுள்ளார். ஆங்கிலப்பாடல்கள், தமிழ் சினிமாப்பாடல்கள் பாடுவதிலும், நடனங்கள் ஆடுவதிலும், கவிதை எழுதுவதிலும் திறமைசாலி என்பது குறிப்பிடத்தக்கது.

300 ஆயிரம் ஒயிரோக்கள் செலவில் பிரமாண்டமான தயாரிப்பில் வெளியான இந்நாடகத்திற்கு 140 பேர் பணியாற்றியிருந்தார்கள். மேடை ஒழுங்கு, நடிப்பு, நடனம், ஒப்பனை, ஆடை அலங்காரம், ஒலி, ஒளி அமைப்பென நிகழ்வு களைகட்டியிருந்தது. 7 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்நிகழ்வில் பங்குபற்றிய அனைத்து நடிக, நடிகையர்கள் அனைவரும் எவ்வித களைப்புமின்றி 7 நாட்களும் தமது பாடல்களை தொடர்ந்து பாடியிருந்தமை பாராட்டப்படவேண்டியதாக இருந்தது.





ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் முன் மனிதருக்கு மேல் அமானுஸ்ய சக்திகள் வாழ்ந்த காலத்தில் ஒரு அரக்கன் அராஜகம் செய்துவருகின்றான். இவ் அராஜகத்தைத் தாங்கமுடியாத 3 தேவதைகள் தமக்குள்ளே உள்ள கருத்து வேறுபாடுகளைக்களைந்து அந்த அரக்கனை அழிக்க ஒன்றிணைகின்றனர். இதில் ஒருவர் நெருப்பின் சிவப்பையும், மற்றையவர் பனிபோல் வெள்ளையையும், மூன்றாவது தேவதை கறுப்பு நிறமாகவும் கொண்டவர். இதனால் அவனைக் கொல்ல முடியாத தேவதைகள், அவனை ஒரு மந்திரக்கண்ணாடிக்குள் அடைத்து ஒரு அழகிய மகாராணியின் அரண்மனைக்குள் வைக்கின்றனர்.

அரக்கனோ மகாராணியின் தூய்மையான மனதை கெட்ட மந்திரங்களால் கறுக்கச் செய்து கொடூரமான இராட்சசி ஆக்குகின்றான். இவரோ அந்நாட்டு பலம் வாய்ந்த மன்னனை இரண்டாம் தாரமாக திருமணம் செய்கின்றபோது அவரின் அழகான மகளுக்கு சித்தியாகின்றார். மன்னன் இறந்த பின் மன்னன் மகளை மகாராணி சித்திரவதைகள் செய்வதைக் கண்ட தேவதைகள் அவர்களின் நிறங்களுக்கேற்ப கறுத்தமுடி, வெள்ளைமேனி, சிவந்த உதடு வழங்கி மந்திர சக்திகளையும் கொடுக்கின்றனர். அதைக் கண்ட அரக்கன் தன் விடுதலைக்கான வழியை சிறுமியிடம் காண்கின்றான். அவளின் 18 ஆவது பிறந்ததினத்தில் அவளை வீட்டை விட்டு வெளியே அனுப்பும் நோக்குடன் சுயம்வரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றாள். கண்ணாடிக்குள் இருக்கும் அரக்கன், மகாராணியிடம் இளம் சிறுமி உன்னை விட அழகி எனக் கூறி மகாராணிக்குக் கொலைவெறி ஊட்டுகின்றான்.

இதிலிருந்து தப்பி காட்டுக்குள் தப்பி ஓடிய இளவரசி ஒரு நாடகக் குழவிடம் அடைக்கலம் பெறுகின்றாள். இந்நாடகத்தில் உண்மை இளவரசன் நடிக்கின்றான். இவ் இளவரசியும் இதில் இணைந்து கொண்டு நடிக்கும் போது அவளில் நாட்டம் கொண்டு இவ்விளவரசன் இவ் இளவரசியை மணக்கின்றான். அதே ஒப்பனையுடன் அரண்மனைக்கு திரும்பி வந்த இளவரசி தன் முகமூடியைக் கழட்டி மகாராணியை வெற்றி கொள்கின்றாள். அப்போது கண்ணாடியிலுள்ள மந்திரம் மறைய விடுதலை பெற்ற அரக்கன் விடுதலை பெற்று வெளியே வருகின்றான்(ராம்). அரக்கன் வெளியே வர நாடகக்குழவினர் அனைவரும் இறக்கின்றனர். இளவரசி அரக்கனை வென்று மின்சி (ஜேர்மனியப்பாடல்) பாடுகிறாள்.

மேலைத்தேய கற்றல், நடனங்கள், பாடல்கள், நடிப்பு, தொழில் என்று பலபக்கங்களில் தம் திறமைகளை வெளிக்காட்டிவரும் எமது இளந்தலைமுறையினர், எம் பெயர் சொல்ல வரும்காலங்களில் தலைநிமிர்ந்து நிற்பார்கள் என்பதற்கு ராம் பரமானந்தன் நடிப்பில் காட்டிய நுணுக்கங்களும், ஜேர்மனி மொழியில் பாடிய பாடல்களின் இனிமையும் எடுத்துக்கட்டாக அமைகின்றன. அத்துடன் இந்நிகழ்விற்கு வந்திருந்த Hamburg, Berlin நகரத்து இசைக்கல்லூரி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் இவரை அணுகித் தம் பாடசாலையில் வந்து இசை பயிலும் வண்ணம் பரிந்துரைத்துள்ளனர். பெற்றோர்க்கும், தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்த ராம் பரமானந்தன் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். இவர் மேலும் மேலும் வாழும் நாட்டவர்களுடன் இணைந்து பல மேடைகள் ஏற வேண்டும் என்று தமிழ் இனத்தின் சார்பாக வாழ்த்துகிறேன்.

இந் நாடகம் மீண்டும் ஜேர்மனிய ஒபர்கௌசன் நகரில் 10.06.2015 அன்று மேடையேறியது.

Theater Oberhausen
Will-Quadflieg-Platz 1
46045 Oberhausen

தகவல் திருமதி கௌசி சிவபாலன்
ஜேர்மனி

## திங்கள்!.....

அதிகாலை கண்விழித்தேன்
கனவு நான் காணவில்லை
இரவு கொட்டிய மழை எல்லாம்
ஓடி மறைந்திருக்க
கார் முகிலும் விலகி நிக்க
நீல வான மேடையிலே
சித்திரை திங்கள் மதி
முகம் காட்ட
ஜன்னல் ஓரம் நிலவின் ஒளி பாய
கண் இமைக்காது காதலுடன்
பார்த்திருந்தேன்
நிலவில் என் மனம் கவர்த்த மாய
கண்ணனின் புன்னகை
வதனம்தெரியுதா என்று
கணப்பொழுதில் மறைந்ததடி
கரு நாகம் போல் ஒரு கருமுகில்
மதி முகத்தை விழுங்கியது
கண் இமைக்கும் பொழுதினிலே
அந்த நிலவும் மறைந்ததடி
மீண்டும் வானில் இருள் கவிந்ததடி

கவி மீனா – ஜேர்மனி

## மதம் இல்லா இறைவன்!...

மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா (1990-2015) வாசகர் கவிதைப்போட்டியில் இரண்டாம் பரிசுபெற்ற இரண்டு கவிதைகள்)

திரு. ஜெயம் தங்கராசா
நெதர்லாந்து

அகவையைக் கொடுத்து ஆயுளை விதித்தார்
கூடாரம் அமைத்து ஆதாரம் பதித்தார்
நிழல்களை மறைத்து நிஜமாக உதித்தார்
பிரபஞ்ச கூறினை அசைத்திடப் பணித்தார்
கருவறைக்குள்ளே உருவாகு முன்பே
இருந்திட்ட இடத்தை தெரியாதவர் யார்
இப்படி உருவம் இது தான் நிறமென
பிறப்பதன் முன்பே அறிந்தவர் யார்
வாழ்வது இங்கே போனபின் எங்கே
அறியாத வாழ்வை கொடுத்தவர் யார்
ஆனந்தப் போர்க்களம் சுகங்களின் தோல்விகள்
வாழ்க்கையை உற்பத்தி செய்தவர் யார்
இது வரை கற்காத தத்துவம்
புரிந்தும் புரியாத புதிராக யார்
புத்தியின் சக்தியை குறைத்து
அனுபவ இடிபாட்டுள் புதைத்தவர் யார்
வாழ்க்கையின் ஆழம் தெரியாத கோலம்
கதையினை எழுதா மறைத்தவர் யார்
இருக்கையில் ஆட்டம் படுக்கையில் கூட்டம்
பூக்கவும் விட்டு பறித்தவர் யார்
உருவங்கள் உண்டு செய்த, ஆருயிர்
அவனியை அந்தரத்தில் நிற்க வைத்தவர் யார்
படைத்தவைக் கெல்லாம் படியளக்கும்
பாரபட்சமில்லா அந்த பரிபூரணர் யார்
ஒட்டாத உலகில் எட்டாத வாழ்வை
கிட்டவே செய்து கொடுத்தவர் யார்
காணாத இடத்தில் இராஜ்ஜியம் அமைத்து
நிழலான நிஜமாய் ஆள்பவர் யார்

மெய்யாக இல்லை பொய்யான எல்லை
உடலுக்குள் உயிரை நிறைத்தவர் யார்
இரவல் இருக்கை இழப்பில் அழகை
பயணத்தை ஒழுங்கு செய்தவர் யார்
உயிர்களை மிஞ்சும் இயற்கையும் அஞ்சும்
நிகழ்வுகள் நடத்தும் இயக்குனர் யார்
மதியினைக் கொண்டு மதித்திட முடியா
விதியினை விதிக்கும் வித்தகர் யார்
இறைவன் என்றிவரை மொழிந்தாலும்
பல பெயர்கள் இருப்பதனால் பழிப்பாகும்
நிதமும் நிறைக்கும் திவ்விய அற்புதனை
மதமின்றி துதித்தாலே வாழ்வு வரமாகும்!........

# ஏழைகள்!......

திருமதி கெங்கா ஸ்ரான்லி
ஜேர்மனி.

பிறக்கையில் உடையுடன்
பிறந்ததில்லை.
மரணம் வந்தபின், தகனம்
செய்வதற்கு,
நிர்வாணமாக விடுவதில்லையே !
இதில் ஏழைகள்
விதிவிலக்கல்லவே !

அவள் ஒரு ஏழை,
ஆனாலும் அழகு பதுமை,
அவள் கையில் பணமில்லை,
அதனால் ஆனாள் எச்சில்
இலை.

மங்கையின் பருவம்,
காதல் கனவு,
கனியவில்லை அது,
ஏழையின் நினைவு.

ஏழைகள் காதலிக்க கூடாது,
இறைவன் படைப்பில் விசித்திரம்.
பிரித்தவர் மாந்தர் ஏழை,பணமென,
மறைகள் அப்படி
கூறவில்லையே !
ஏழைகள் உடம்பில் ,

எண்ணிடும் எலும்புகள் ,
ஒட்டிய வயிறு விளம்பிடுமே !
ஏழ்மைதனை.

உணவு, உடை இல்லை,
உணர்வுடன் ஊசலாடும் உயிர்,
ஒரு சாண் வயிறு வளர்க்க.
உயிர் பிழிந்து உழைப்பார்.
இருந்தும் இவர் குடிப்பதோ
கஞ்சி,
பெறும் கூலியோ சிறு மிஞ்சி,
செய்யும் வேலைக்கு அஞ்சி,
கையில் கிடைப்பது பஞ்சி.
இரக்கமற்ற மனிதர்
ஏழைகளை வருத்தி
தாம் குளிப்பார் பன்னீரில்
ஏழைகள் மிதப்பார் கண்ணீரில்,
ஏழைகளில் அதிக புத்திசாலி
படிப்பிலே அவர் திறமைசாலி
பொறுக்காபணம் புகுந்து,
நறுக்குமே அவர் நல்லறிவை.
பதவியில் இருக்கும் பணம்
உதவுமா ஏழைகளுக்கு,
மாளிகைகள் அருகில்
மண் குடிசை தான் இருக்குமா ?

ஒட்டுப்போட்ட சட்டை.
உடம்பை மறைக்க
அந்த ஒட்டுக்குள்ளே
உள்ளுடம்பு தேடும் மாந்தர்.
ஒரு உடை கொடுத்திடார்,
உதவ முன் வரார்,
ஊனமுள்ள மனத்தினர்
ஊடுருவார் ஏழைகள் உடம்பை.
கோட்டை, கோபுரங்கள்,
உயரமானது தான்,
சாட்டையடிப்பட்ட ஏழையின்
மனம் அதைவிட பெரியது.
ஏழையின் சிரிப்பில்
இறைவன் இருப்பார்.
தில்லைக் கூத்தனும்,
ஏழையாக இருந்தமையாலோ ?
ஏழைகளிடம் லட்சமில்லை,
ஆனால் மனதில் பட்சமுண்டு,
அவரிடம் வறுமை உண்டு,
மனதில் சிறுமை இல்லை.
ஏழை மடியில் கனமில்லை
மனதில் பாரமில்லை
நித்திரைக்கு பஞ்சமில்லை
நிம்மதிக்கு சொத்துமில்லை.
பணக்காரன் பாலில் குளித்து
பஞ்சணையில் படுப்பான்
தூக்கம் வராது.
ஏழை குடிலில் வாழ்ந்து
தரையில் படுத்தாலும்
சுகமான தூக்கம்
யுகமாக வருமே !
இவரன்றோ மனத்தால்
பணக்காரன், இவரா ஏழை ?

# இன்றைய பெண்களின் நிலை...

(மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா (1990 - 2015) வாசகர் கட்டுரைப் போட்டியில் இரண்டாவது பரிசுபெற்றது)

திருமதி. சிவகாமசுந்தரி
கணேசநாதன்
Goslar-Germany

இன்று உலகில் பெண்கள் பல சாதனைகளைப் புரிந்து கொண்டிருப் பதைக் காணமுடிகிறது.பெண்கள் பெருமைமிக்கவர்களாக உருவாகும் பொழுது அவ்வீட்டிலுள்ள அனைவரும் இயல்பாகவே பெருமையோடு உலா வர வழி ஏற்படும்".பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்." என பெண்களின் குறிக்கோளை கூறியது மட்டுமல்லாமல் "எட்டும் அறிவினில் ஆணிற்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி" என்ற பாடலில் பெண்சமுதாயம் பெருமை பெற்றது. யுகம் யுகமாக முகம் பார்க்க மட்டுமே கண்ணாடி பார்த்த பெண்கள் கணிப்பொறிதிரையோடு உரையாடும் காலமிது.' இன்று எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும் சரி அதில் முன்னேறியுள்ள பெண்களின் பிண்ணணியில் இருப்பது கல்வி.'

இந்திராகாந்தி, அன்னைதெரசா அன்னைபூபதி போன்றவர்களை உருவாக்கியது ஒரு பொறுப்பான தாய்தான் என்பதை உணரவேண்டும் பெண் உலகின் விடிவெள்ளியாகத் திகழ்கிறாள். மாதர்தம்மை அடக்கி வைக்கும் மடைமையை ஒழித்துவிடுபவளாக பெண் விளங்குகிறாள்.முக்கியமான விடயம் ஒன்றை சொல்லியே ஆகவேண்டும். பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலைதான் என்ன? சொல்லவே நாக்கூசுகிறது.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணியிருந்த காலமது என்பதையும் மறுப்பதற்கில்லை கிராமங்கள் ஆனாலும் சரி நகரமானாலும் சரி பாமரபெண்ணானாலும்சரி படித்தபெண்ணாலும்சரி இன்றைக்கும் பெண்களின் நிலை சில வகையில் மிகவும் இழிவாக மனவேதனைப்படும் விதமாக உள்ளது.இப்படிப்பட்ட பெண்களுக்கு எதிரான செயல்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். 1789ஆம் ஆண்டு ஜீன் 14ந்திகதி சுதந்திரம் சமத்துவம் பிரநிதித்துவம் போன்ற கோரிக்கைகளை ஏற்று பிரஞ்சுப்புரட்சி நடாத்தப்பட்டது. 1848 பிரான்சில் புறுசியசில் இரண்டாவது குடியரசை நிறுவிய 'லூயி பிளாங்'

பெண்கள் அரசவை ஆலோசனைக்குழக்களில் இடம்பெறவும் வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்த நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 8ம்நாள்.இதுவே அனைத்துலக பெண்கள்தினம் என அறிவிக்கப்பட்டு இன்று 167வருடங்கள் ஆகியும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் ஓய்ந்தபாடில்லை.

ஆம் இந்த 20ம்நாற்றாண்டில் தமிழர் தாயகத்தில் நடந்தேறிய காட்டுமிராண்டி தனங்களை தட்டிக்கேட்க முன்வரவில்லை. இப்போது சிரியா ஈராக் போன்ற நாடுகளில் வாழ்பவர்களை அந்நாட்டு குழப்பங்களுக்காக அடைக்கலம் கொடுக்க ஐரோப்பிய நாடுகள் முன்வந்துள்ள வேளை சிங்களராணுவத்தால் இலங்கையில் உள்ள தமிழ்ப்பெண்கள் அனுபவித்த பாலியல் வல்லுறவு துன்புறுத்தல் போன்ற பல்வேறு பிரச்சனைகளை இன்னும் எதிர்கொள்ளும் இந்நிலையில் ஏன் அடைக்கலம் கொடுக்கமறுக்கின்றதோ தெரியவில்லை.

ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் கைக்கூலிகள் இதுதான் உண்மை. எமது சமுகத்திலே தமிழ்ச்சமுதாயம் பெண் என்பவள் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு போன்ற கோட்பாடுகளுக்குள் இருப்பின் அவள்தான் பெண்.இல்லையெனில் ”ஓடிப்போனால் ஓடுகாலி” என்பதுவும் யதார்த்தமே.பெண் ஆணோடு சேர்ந்து பழகினால் அவளுக்கு ”வேசி” எனவும் பிள்ளை பெற்றுக்கொடுக்கும் இயந்திரம் கருப்பை பழுது என்றால் அவள்” மலடி” என எத்தனையோ பட்டங்கள்.இவ்வகையான இன்னல்கள் பெண்களின் வாழ்க்கையில் ஏற்படுவதற்கும் தரக்குறைவாக பேசுவதற்கும் பெண்கள் தடம்புரள்வதற்கும் ஆண்கள் எவ்விதத்திலும் காரணம் இல்லையா?

இன்றைய பெண் சமுதாயத்தை பீடித்துள்ள நோய்களுள் பலவற்றை குறிப்பிடலாம். வரதட்சனை பால்யவிவாகம் பெண்சிசுக்கொலை பாலியல்க்கொலை போன்ற விவகாரங்களை குறிப்பிடலாம். பெண்சிசுக்கொலை நடந்தேறுவதற்கு முக்கியகாரணமே வரதட்சனைக்கொடுமையே எனலாம். அப்படி விவாகம் செய்தாலும் அவர்கள் கொத்தடிமையே.ஏன் இடம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழ்ந்தாலும் சில இல்லங்களில் சில பெண்களின் நிலை இதுதான். இதனை கவிஞர்வைரமுத்து அவர்கள் வேதனையோடு குறிப்பிடுவதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். ”பாவம் பெண்கள் இந்த இல்லறக்கிரிக்கெட்டில் கட்டிலறைக்கும் சமயறைக்கும் ரன்கள் எடுத்தே

ரணமாய்போனார்கள்" இது போன்ற நிலையில் தான் பெரும்பாலான பெண்களின் வாழ்கை உள்ளது. ஆம் "பெண் போடும் இரட்டைவேசம்" என்றே சொல்வேன். உடன்கட்டை ஏறுதல் போன்ற விவகாரங்கள் குறைந்ததற்கு கி.பி 1774ல் வங்காளத்தில் பிறந்த பிராமண குடும்பத்தைச் சேர்ந்த "ராஜாராம்மோகன் ராயின்" தலை சிறந்த சமுக சேவையை குறிப்பிடலாம். ஆதாவது "சதி" எனும் உடன்கட்டை ஏறுவதை எதிர்த்து போராடியதும் பலதாரமணம் ஒழிக்கப்பட்டு கைம்பெண் மறுமணம் கலப்புத்திருமணம் போன்றவற்றை ஆதரித்தமையையும் கூறலாம்.

"திருமணம் சொர்கத்தில் அல்ல ரொக்கத்தில் தான் நிட்சயிக்கப்படுகிறது." இந்த மனநிலை மாற வேண்டும். ஆண்கள் பெண்களுக்கு சீதனம் கொடுக்கும் நிலை உருவாக வேண்டும். அத்துடன் பெண்களை ஆண்கள் தம் துணையாக பார்க்க வேண்டும் எனக் கூறுகிறார் பாரதி எப்படிஎனில் "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கியிவ் வையந் தழைக்குமாம்" என்று கூறினார். இந்த வழியில் ஆணும் பெண்ணும் சரிநிகர்சமானமாக வரும் பொழுது வரதட்சனைக் கொடுமை முடிவுக்கு வரும்.

ஆண் என்பவன் தாயின் கருவறையில் இருக்கும்போது தாய்படும் இன்னலை கண்டுவிடமுடியாது.பிறந்து பெரியவனாகி அவனும் திருமணபந்தத்தில் புகுந்து தாய்மை அடைந்த அவனது மனைவியை பார்த்தும் திருந்தாத ஆண்வர்க்கங்கள் எப்பவும் திருந்திவிடமுடியாது. ஒரு பெண்ணானவள் குழந்தை பெற்றெடுப்பதில் 1ம்மாதம் உதிரம்மிஞ்சி 2ம்மாதம் இதுவென்றுஅறிந்து 3ம்மாதம்முழுவதும் தெரிந்து 4ம்மாதம் வாந்திஎடுத்து 5ம்மாதம் மாங்காய்தின்று 6ம்மாதம் இடுப்பதுநோக 7ம்மாதம் கர்ப்பம் நோக 8ம்மாதம் நடைதளர்ந்து 9ம்மாதம் சிலர் முன்அழுது 10ம்மாதம் பலர் முன் அழுது பெற்றெடுக்கும் அவளுக்கு எத்தனைதான் இன்னல்கள். சிங்கள வெறிகாடையர்களால் தமிழ்ப்பெண்கள் அனுபவித்த கொடுமைகளை சனல்4 காட்சிகளை பார்த்து கண்ணீர் விட்டழுததும் மறக்கவில்லை.

தாய்க்கும் தாரத்திற்கும் வித்தியாசம் கண்டு கொள்ளாத ஆண்வர்க்கம் அடுத்தாத்து பெண்களை காமவெறிகொண்டு பார்க்கும் இவர்கள் எல்லாம் அன்னையர் தினத்தை எப்படி மதிப்பர். "பாதகம் செய்பவரைக்கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா மோதிமிதித்துவிடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா" என்று பாரதி பிஞ்சுப் பிள்ளைகளின் மனதில் விதைத்தார் ஏனெனில் இந்த பெரிசுகள் சொன்னால் கேட்காதுகள் என்று நினைக்கதோன்றுகிறது.

பெண்ணை மனதளவில் பலவீனப்படுத்தி தாழ்வுமனப்பாங்கை உண்டாக்காமல் அவளை பாதுகாப்பதே மேலானது. பெண்ணை தெய்வமாக தேவதையாக தலைவியாக வர்ணிக்கும் இலக்கியங்கள் உயர்வான மதிப்பைபோற்றும் அதே நேரம் பெண்ணின் இயல்பான மன ஓட்டங்களைஉணர்வுகளை மதித்து பழக வேண்டியது ஒவ்வொரு ஆணின் கடமையாகும்.

அப்போதுதான் பெண்ணுரிமை என்பது செயலால் சரியாகும். ஏனினும் பாரதி கண்ட புதுமைப்பெண் மலர்ந்து விட்டார்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் பெண்கள் மனம் வருந்தி கண்ணீர் சிந்துகிற எந்த மண்ணும் செழிக்காது. எத்தனை வளம் பலம் இருந்தாலும் எனவே நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்கு தோள் கொடுத்து துணை நிற்போம். அப்போது தான் இந்த தேசம் உலகில் முதல் இடத்தை எட்டும்.

## துளிப்பாக்கள்....

அன்பு:-அவலமான மானிட வாழ்வில் அவசியமானதும், முக்கியத்துவம் கொடுப்பதும்.

விவிலியம்:-எப்படியும் அல்ல, இப்படித்தான் வாழ் என வழிகாட்டிடும் புத்தகம்.

சிரிப்பு:-பிறரை மகிழ்விக்க, நோய் தீர்க்க இறைவன் அளித்த இலவச இணைப்பு.

வறுமை:-எப்போதும், எவரும் இறைவனை மறக்காதிருப்பதற்கான அன்புப் பரிசு.

தூக்கம்:-மூளைக்கு வளர்ச்சியும், எல்லாவற்றையும் மறந்து சந்தோஷிக்கும் சில பொழுதுகள்.

தியாகம்:-தன்னையே மக்களுக்காய் அர்ப்பணம் செய்த இயேசுபிரானின் செயல்.

திருமதி ஜெயா நடேசன்
ஜேர்மனி

# கண்ணாடி வாழ்க்கை........

**(சிறுகதை)**

மன் சஞ்சிகையின் வெள்ளிவிழா (1990-2015) வாசகர் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசுபெற்றது.

திருமதி மீரா குகன்
ஜேர்மனி

அந்தி மயங்கும் நேரம். பனை ஓலைகளினால் வேயப்பட்ட கீற்றுகளினுடாக தெரியும் சிறு இடைவெளியில் எகிறி அடித்து மெல்ல தலையை நுழைக்கும் வெளிச்சத்தைப் போன்று இவ் ஐரோப்பிய நாடாகிய ஜேர்மன் நாட்டின் பனிக்காலத்தின் இருளினூடாக சூரிய கதிர் தன்னை வெளிக்காட்ட மிகவும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது. சஹானா தை மாத குளிரையும் பொருட்படுத்தாது, என்றுமே இல்லாதவாறு இயற்கை அழகில் அப்படியே லயித்துக்கொண்டிருந்தாள். காதலில் வீழ்ந்து விட்டால் கவி திறன் தானாகவே ஒட்டிக் கொள்ளுமோ என்னவோ ? எத்தனை நாட்கள் இப்பனிக் கால மாதங்கள் வந்தால், கடுங்குளிரை தாங்காது விரைவாகவே வீட்டிற்குள் முடங்கி விடவே விரும்புவாள்.

ஆனால் இன்று அதிசயமாக அவளுக்கு குளிர் ஒன்றும் பெரிதாக தெரியவில்லை. அதற்கு மாறாக அவள் மனதில் பட்டாம்பூச்சி சிறகடித்துப் பறந்தபடி இருந்தது. இவளது மாற்றத்துக்கு காரணம் அவளுடன் பல்கலைக் கழகத்தில் படிக்கும் ஜான் தான். ஜான் மூன்றாம் வருட மாணவன். மிகவும் வாட்டசாட்டமான அவன் பல்கலைக்கழகத்தின் எல்லோருடைய மதிப்பையும் பெற்ற பிரபல மாணவன். இவளோ முதலாம் வருட மாணவி. அப்படியிருக்க இருவரும் காதல் வயப்பட்டது ஒரு விபத்து தான். அதாவது ஒருநாள் ஜான் கால்பந்து விளையாட்டின்போது பந்தை மிக வலிமையாக அடிக்க, தற்செயலாக அவ்வழியாக வந்த சஹானாவின் முகத்தில் அப்பந்து வந்து விழ அவனது கரிசனையில் தொடங்கிய சந்திப்பு அப்படியே அவனின் விடா முயற்சியின் மூலம் காதலாக அவளினுள்ளும் மலர்ந்திருந்தது.

ஜான் சஹானாவின் அழகிலும் அவளது மென்மையான கூச்ச சுபாவத்திலும் ஈர்க்கப்படதாக தெரிவித்தான். சஹானாவுக்கு தனது பல்கலைக்கழகத்தின் பிரபல மாணவன் தன்னிடம் காதல் கொண்டது பெரும் மகிழ்ச்சியை கொடுத்தது. அன்றும் ஜானை சந்தித்து விட்டு அவனைப் பற்றிய கற்பனை உலகில் சிறகடித்த வண்ணம் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அவளுக்கு தான் இப்பூமியில் புதிதாக பிறந்தது போலவும், கண்ணில் தென்படுபவை எல்லாவற்றையும் நின்று, நின்று ரசிக்க வேண்டும் போலவும் இருந்தது.

வீட்டுக்கதவை மெல்ல திறந்து உள்ளே வந்தாள். அம்மா எனக்கு கோப்பி போட்டு வையுங்கோ! நான் உடை மாற்றிக்கொண்டு வருகிறேன்.. என்று தன் அறைக்கு போகிற போக்கில் கூறியவாறே சென்றவள், அம்மாவிடமிருந்து ஒரு பதிலும் வராமையைக்கண்டு ஒரு கணம் நின்றாள். வழமையாக தான் தாமதித்து வீடு வரும் பொழுது கேட்கும் கேள்விக்கனைகளை தொடுக்காது அம்மா மௌனம் சாதித்தது அவளுக்கு புதுமையாக இருந்தது. திரும்பி அம்மாவை நோக்கியவள் முக வாட்டத்துடன் காணப்பட்ட அம்மாவும், மிகுந்த கோபம் முகத்தில் வெடிக்க இருந்த அப்பாவையும் பார்த்து திடுக்கிட்டாள்.

"அம்மா என்னம்மா நடந்தது"? சஹானா படபடப்புடன் கேட்டாள்? என்ன பிள்ளை, இப்படிச் செய்திட்டாய்? அப்பாவும், நானும் எப்படி இனி வெளியால முழிக்க முடியும்? அதற்குள் அப்பா குறுக்கிட்டு, இவள வீட்டில ஒழுங்கா வைச்சு வளர்க்காமல், செல்லம் கொடுத்து சுதந்திரமாக திரிய விட்டதிற்கு இப்படி எங்கள தலை குனிய வைத்து விட்டாள். இனியும் அந்த ஜேர்மன் கார பெடியனோடு உன்னைப் பார்த்தேன், இந்த வீட்டில கொலை தான் விழும். நான் உடனே உனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையை எங்கட சனத்திலையே பார்க்கிறன். உனக்கு இந்த படிப்பும் வேண்டாம், மண்ணாங்கட்டியும் வேண்டாம். சஹானாவுக்கு விடயம் விளங்கி விட்டது. அவள் கொஞ்சம் வீராப்புடனேயே தன் பெற்றோர் முன் வந்து நின்றாள்.

அம்மா, அப்பா என்னை மன்னித்து விடுங்கள். நான் ஒருபோதும் ஜானை மறக்கப் போவதில்லை. அவனைத் தான் கலியாணமும் செய்யப் போறன். நீங்கள் இருவரும் வாழும் வாழ்க்கை என்னால் வாழ முடியாது. விரும்பினால் ஜானை ஏற்றுக்கொள்ளுங்கள், அல்லது என்னை மறந்து விடுங்கள். அவள் ஆவேசத்துடன் தன் அறைக்குள் சென்று முடங்கினாள். சஹானாவுக்கு யாருடனாவது கதைக்க வேண்டும் போலிருந்தது. தன் நண்பி சுஜாவை உடனே தொலைபேசியில் அழைத்தாள். மறுமுனையிலிருந்து சுஜா அடியே, சஹானா எப்படியடி இருக்கிறாய்? நீ இப்பொழுது அழைத்ததும் நல்லதாக போய்விட்டது. உனக்கு நான் ஒரு நல்ல செய்தி சொல்லப் போறன். எனக்கு வீட்டில கலியாணம் முடிவாக்கி விட்டார்கள்.

மாப்பிள்ளை லண்டன்ல ஒரு டாக்டராம். ஒரு முறை சந்தித்தேன். ஆளும் பரவாயில்லை. நானும் ஓம் சொலிட்டன். உனக்கு ஜான் இருக்கிறான். எனக்கு அப்படி ஒரு காதலும் இல்லை தானே. அதனால அம்மாவும், அப்பாவும் பார்த்தவரையே கலியாணம் செய்யப்போறன்.. என்று மிக உற்சாகத்தில் கூறி முடித்தாள். சஹானா தன் நண்பிக்காக சந்தோஷப்பட்டாலும் முன் பின் பழகாது பெற்றோர் பார்த்து தரும் மாப்பிள்ளையை அவள் திருமணம் முடிப்பது அவளுக்குள் ஒருவகையில் உறுத்தியது.

சஹானா பெற்றோரின் எதிர்ப்பின் மத்தியிலேயே ஜானை திருமணம் செய்து கொண்டாள். பல்கலைக்கழக படிப்பை இருவருமே இடையில் நிறுத்திவிட்டு ஜான் வேலையில் சேர்ந்தான். அவளது பெற்றோருக்கு இவளது செயல் மிகவும் கவலையை அளித்தது. அவர்களால் ஜானின் குடும்பத்துடன் சுமூகமாக பழகவும் முடியவில்லை. உற்றார் உறவினர் மத்தியில் கோலாகலமாக தமது ஒரே மகளின் திருமணத்தை நடத்த முடியாமை போனது அவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனால் சஹானா, தன் கணவனுக்கு ஏற்ற வகையில் ஜேர்மன் நாட்டு கலாச்சாரத்துடன் ஒன்றிப்போக தன்னை மாற்றிக் கொண்டாள்.

என்றாலும் அவள் வளர்ந்த முறையும் ஜானின் வாழ்க்கை முறையும் பலவகையிலும் வித்தியாசப்பட்டது. சஹானாவுக்கு இவ்வாழ்க்கை முறை மிகவும் பிடித்துக்கொண்டது. அவளது வீட்டில், அவள் அம்மா மிகுந்த நேரத்தை சமையல் அறையில் உணவு தயாரிப்பதிலேயே செலவிடுவதும் அம்மா அப்பாவிடம் ஒரு அன்னியோன்னியம் இல்லாததையும் அவள் கவனித்திருக்கிறாள். ஆனால் ஜான் சஹானாவிடம் மிகுந்த காதலில் உருகினான். ஒவ்வொருமுறையும் சமையலில் அவன் உதவியது மட்டுமின்றி பல முறை இவளை ஓய்வெடுக்க கூறி விட்டு தானே உணவு தயார் செய்து பரிமாறினான். சஹானா, தன் தந்தை சமையல் அறையில் அம்மாவுக்கு உதவி செய்ததை என்றுமே கண்டதில்லை. தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று தன்னையே மெச்சிக் கொண்டாள்.

இப்படியே சந்தோஷமாக வாழ்வை கழித்துக்கொண்டிருந்தாள் சஹானா. இவளது அதிர்ஷ்டத்தினாலோ என்னவோ ஜானுக்கு வேலையிடத்திலும் உயர் பதவி கிட்டியது. அவன் இதனால் மிகவும் பூரிப்படைந்தான். வேலை உயர்வுடன் அவனுக்கு வேலைப்பழுவும் கூடியது. மிக நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியும் இருந்தது. இதனால் சஹானா ஜானுடன் சேர்ந்து செலவிடும் அந்த சந்தோஷ நேரங்கள் கொஞ்ச கொஞ்சமாக குறைந்து கொண்டு வந்தது.

ஓய்வு நேரம் மிகுந்து போகவே தன் நண்பி சுஜாவை தொடர்பு கொண்டாள். இவளது குரலை கேட்டதும் சுஜா மிகுந்த சோகத்துடன் அழுதாள். திடுக்கிட்ட சஹானா தன் நண்பியை உடனே தன்னிடம் வருமாறு அழைத்தாள். சுஜா தன் பெற்றோர் பார்த்த மாப்பிள்ளையை திருமணம் முடித்து லண்டன் நகரில் குடித்தனம் புகுந்தாள். மாப்பிள்ளை என்னவோ அங்கே ஒரு பிரபல டாக்டர் தான். ஆனால் சேர்ந்து வாழ முற்படுகையில் தான் அவன் குணாதிசயங்கள் கொஞ்ச கொஞ்சமாக சுஜாவுக்கு தெரிய வந்தது. அவன் குடி பழக்கத்துக்கு அடிமையானவன். அத்துடன் இவளை மிகவும் துன்புறுத்தவும் தொடங்கினான்.

வெளியார் யாவருக்கும் தான் ஒரு மதிப்புக்குரிய நபர் என்று காட்டிக் கொண்டாலும் வீட்டில் சுஜாவை மகிழ்ச்சியாக வைத்திருக்கவில்லை. கொஞ்சம் சமாளித்து போக சுஜா மிகவும் பிரயத்தனம் செய்தும் பயனின்றி அவள் தன் பெற்றோரிடமே திரும்பி வந்து விட்டாள். சுஜாவின் சோகக் கதையை கேட்ட சஹானா மிகவும் மனம் வருந்தினாள். அவளை தேற்றி சுஜா, என் கணவன் ஜானுக்கு பதவி உயர்வு கிட்டியதனால் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது. ஆனால் நான் மிகவும் பாக்கியசாலி. அவன் ஒவ்வொரு நாளும் நேரம் சென்று வீடு திரும்பினாலும் என்னை மகிழ்வூட்டுவதற்காக, வியப்பூட்டும் பரிசுகளை கொண்டு வருவான்.

என்னுடன் செலவிடும் நேரம் குறைவு என்பது அவனுக்கு குற்ற உணர்ச்சியை தருகிறது போலும். இது தான் சுஜா, நாம் எமது பெற்றோரின் சொல்லைக் கேட்டு கலாச்சாரம், கட்டுக்கோப்பு என்று இருந்தால் உனது நிலை தான். பார் நான் காதலித்து கலியாணம் செய்தேன் , இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறேன். சரி வா , கொஞ்சம் வெளியே சென்று வருவோம் என சுஜாவையும் அழைத்துக்கொண்டு உணவு விடுதி ஒன்றுக்கு கிளம்பினாள். நண்பிக்கும், தனக்கும் விரும்பிய உணவுக்கு உத்தரவு கொடுத்து விட்டு திரும்பியவள் அப்படியே உறைந்து ஒரு கணம் நின்று விட்டாள்.

அங்கே ஒரு ஒதுக்கு புறமாக இருந்த இருக்கையில் ஒரு ஜேர்மன் நாட்டு பெண்ணுடன் மிக அன்னியோன்னியமாக இருப்பது எனது ஆசைக் கணவன் ஜானா?!. மீண்டும் உற்றுப் பார்த்தாள். அவன் தான், சந்தேகமேயில்லை. சஹானாவின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. சுஜா இவளின் நிலை கண்டு பதைபதைத்தாள். என்ன சஹானா ஏன் அழுகிறாய் ? என்ன நடந்தது?

என்று சுற்றும் முற்றும் பார்த்தாள். அதற்கிடையில் ஜானும்இவளைக் கண்டுக்கொண்டான். அவன் மிகவும் ஆசுவாசமாக எழும்பி தன் பெண் நண்பியுடன்இவளை நோக்கி வந்தான். வந்தவன் முகத்தில் குற்ற உணர்வு எதுவுமின்றி சஹானா, டார்லிங் நீயே எங்களை கண்டது நல்லதாக போய்விட்டது. எனக்கும் கத்ரினுக்கும் கொஞ்ச காலமாக பழக்கம் ஏற்பட்டு அது காதலாகவும் மலர்ந்து விட்டது. நம்மிருவருக்கும் நன்றாக ஒத்துப் போகிறது. ஆகவே தயவு செய்து என்னை மன்னித்து விடு.இனி நீ உன் பெற்றோரிடமே சென்று விடு, ஏனென்றால் கதரின் என் வீட்டிற்கு வந்து வசிக்கப் போகிறாள் என கூறியவாறே திரும்பியும் தன்இருக்கைக்கு கத்ரினை அணைத்தவாறே சென்றான். சஹானா அப்படியேஇடி விழுந்தது போல் சுஜாவின் தோளில் சாய்ந்து குமுறிக் குமுறி அழதாள். தனது பெற்றோர் முப்பது வருடங்களாகஇணைபிரியாமல் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தை அப்பொழுது தான் அவள் புரிந்துக் கொண்டாள்.

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள்

Prof. K. Kailasapathy (President) Oct. 1974 - July 1977
Prof. S. Vithiananthan (President) Aug. 1977 - Dec. 1978
Prof. S. Vithiananthan Jan.1979 - 1982, 1982 -1985,1985-June 1988
Prof. V. K. Ganeshalingam (Actg.) July 1988 - Aug. 1988
Prof. A. Thurairajah Sep. 1988 - 1991, 1991 - March 1994
Prof. K. Kunaratnam April 1994 - June 1996
Prof. P. Balasundrampillai July 1996 - 1997, 1997 - 2000, 2000 - March 2003
Prof. S. Mohanadas March 2003 -March 2006
Prof. R. Kumaravadivel (Actg.) June 2006 - Dec. 2007
Prof. N. Shanmugalingam Dec. 2007 - March 2011
Prof. (Miss) V. Arasaratnam April 2011 - 2014, 2014 -

# மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா

கையெழுத்துப் பிரதியொன்று கணனித் திரையேறியது. சொல்லடுக்குக் கொண்டு கைநூலாய்த் தடம் பதித்தது. விண்ணெட்டும் புகழ்தாங்கி வெள்ளிவிழாக் கண்டது. எத்தனை இடர்கள் வரினும் எத்துணை பழிகள் வரினும் சுத்தமான எண்ணம் கொண்ட சிந்தனைகள் சோர்ந்து அழிவதில்லை என்னும் நம்பிக்கையில் 14.01.1990 பொங்கல் தினமன்று கையெழுத்துப் பிரதியாக ஆரம்பிக்கப்பட்டது தான் மண் சஞ்சிகை. புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், அவர்தம் பிள்ளைகளும் தாய்மொழியின் சிறப்பையும் பற்றையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடனும், பிறந்த மண்விட்டு புலம்பெயர் மண்ணை வந்தடைந்தாலும் சொந்த மண்ணின் காந்தக் கவர்ச்சியை கழட்டிவிடாது போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனும் ஆரம்பித்த மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா 02.05.15 அன்று ஜேர்மனி டுயிஸ்பேர்க் நகரிலே மேடை கண்டது. பிரதம விருந்தினராக டுயிஸ்பேர்க் மாநகரசபையின் தலைவர் Volker Mosblech அவர்களும், சிறப்பு விருந்தினராக ஜேர்மனி-லண்டன் இரங்கும் இல்லத் தாபகர் சிவனடியான் சிறீபதி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மண்டபம் நிறைந்த கூட்டத்துடன். மண் சஞ்சிகையில் தொடர்ந்து எழதி வரும் எழத்தாளர்களான திருமதி. ஜெயா நடேசன், திருமதி. மீனா சிவலிங்கம் ஆகியோர் குத்துவிளக்கேற்ற விழா ஆரம்பமாகியது. அதைத் தொடர்ந்து இலங்கையின் போராட்ட காலங்களில் இறந்த சகல மக்களுக்கும், உலகில் இயற்கை அனர்த்தங்களால் உயிர் இழந்த மக்களுக்கும், அவர்களின் ஆத்மா சாந்தி வேண்டியும், யாவரும் சகோதரத்துவமான முறையில் நல்வாழ்வு வாழ வேண்டும் என்றும், இனப்பிரச்சினை காரணமாக இறந்த சகல பொது மக்களுக்கும், ஈழத்தமிழ் மக்களுக்காகவும், தமிழ்மொழி, இன வளர்ச்சிக்காகவும், தம்முயிர்களைத் தியாகம் செய்த அனைவருக்காகவும் ஆத்ம சாந்தி வேண்டியும் ஒரு நிமிட மௌன அஞ்சலி செய்யப்பட்டது.

செல்வி ரஜீவா சிறிஜீவகன் தமிழ்மொழி வாழ்த்து இசைக்க, திருமதி இராஜேஸ்வரி சிவராசா வரவேற்புரை நிகழ்த்தினார். அதன்பின் பின் மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் மண்ணின் மகிமையை போற்றிப் பாதுகாத்து வருபவருமான திரு.வ.சிவராசா தலைமை உரை நிகழ்த்தினார். ஆரம்பம் இருந்து இன்றுவரை இச்சஞ்சிகை இரு மாதங்களுக்கு ஒரு சஞ்சிகையாக வெளிவருவதற்குத் தான் பட்ட கடினங்களும் அதற்காக ஒத்துழைப்புத் தந்தவர்கள் பற்றியும் ஆரம்பமிருந்து விளக்கமாக எடுத்துக் கூறினார். உள்ளவர்களிடம் இருந்து பணம் பெற்று இல்லாத ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் தனது பணிபற்றியும், அதனை இதுவரை சுமார் 40

ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் காப்பகங்களுக்குக் கொடுத்து உதவினார் என்பதனையும், அவர்களுக்கு அனுப்பிய பறறுச் சீட்டையும், அவர்கள் பெற்றுக் கொண்ட அத்தாட்சிக் கடிதத்தையும் வெளிப்படையாக மண் சஞ்சிகையில் பிரசுரிப்பது பற்றியும், 31-12-2014வரை 43.997-35னுஆ, 1.500-00 பவுண்ஸ், 45.436-50 நுரசழ தன்னால் இலங்கை ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டது என்னும் உண்மையையும் விளக்கமாக எடுத்துரைத்தார். வந்திருந்தோர் அனைவரும் உவகை கொள்ள இவ்வுரை சிறப்பாக அமைந்திருந்தது.

பிரதம் விருந்தினராக டுயிஸ்பேர்க் மாநகரசபையின் முதல்வர் Volker Mosblech தனது உரையில் ஒரு சஞ்சிகை மூலம் நடக்கின்ற பெரிய சமுதாய நோக்கு பற்றியும், ஜேர்மனிய நாட்டு இளம் தலைமுறையினர் கல்வியில் காட்டுகின்ற முன்னேற்றங்கள் பற்றியும் எடுத்துக் கூறி மண் சஞ்சிகையின் ஆசிரியர் வ.சிவராசா அவர்களை வாழ்த்தினார். சிறப்பு விருந்தினர் சிவனடியான் சிறீபதி அவர்கள், தமக்கும் வ.சிவராசா அவர்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் பற்றியும் இரங்கும் இல்லத்தைத் தான் நடத்துகின்ற தன்மைகள் பற்றியும், இடர்கள் பற்றியும் தனதுரையில் எடுத்துரைத்தார்.

விசேடவிருந்தினர்களாக தமது சிறுவயது தொடக்கம் மண்சஞ்சிகையில் தொடர்ச்சியாக இன்றுவரை எழுதிக்கொண்டிருக்கும் செல்வி. சாகித்தியா சண்முகரட்ணம் (Weeze) செல்வன். பிரணவன் யோகராசா (Düsseldorf) அவர்கள் கலந்து சிறப்பித்துப் பாராட்டப்பட்டது இந்நிகழ்வில் முத்திரை பதித்தது.

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் மண் சஞ்சிகை ஆசிரியருக்கு மானுடவாரிதி என்னும் பட்டம் வழங்கி பரிசில்அளித்தனர். அதனைத் தொடர்ந்து ஜேர்மன் தமிழ் கல்விச்சேவை தங்கப்பதக்கம் அளித்து அவருக்குத் தம்மால் வழங்கிய புலம்பெயர் சாதனையாளர் என்னும் பட்டத்தினை நினைவுபடுத்தி கௌரவப்படுத்தியமை கண்கொள்ளாக் காட்சியாக உலகமே வாழ்த்துவது போன்று அமைந்திருந்தது. அத்தோடு எசன் நகர தமிழ்க்கல்வி கலாச்சார மன்றத்தினரும் ஆசிரியர் அவர்களைப் பொன்னாடைபோர்த்தி வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவித்துக்கொண்டனர். நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நடன வரிசையில் எசன் தமிழ்ப்பாடசாலை நடன ஆசிரியர் திருமதி. சாந்தினி துரையரங்கன் அவர்களின் மாணவிகளின் தீபநடனமும், விநாயகர் கௌத்துவமும், கண்ணன் நடனமும் இடம்பெற, Krefeld ஆடற்கலாலய ஆசிரியை திருமதி. றெஜினா சத்தியகுமார் அவர்களின் மாணவிகளின் விநாயகரைப் போற்றிப் புகழ்ந்து ஆடிய நடனமும், கனீன சஞ்சரத்தின துதியும் இடம்பெற அரங்கு கரகோசத்தால் நிறைந்தது.

மண் சஞ்சிகையின் பணியில் விஞ்சி நிற்பது மனிதநேயப்பணியா? இலக்கியப்பணியா? என்னும் தலைப்பில் கவிஞர் ப.பசுபதிராஜா அவர்கள் தலைமையில் சொல்லாடுகளம் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய எழுத்தாளர்களான திருமதி. கௌசி, திருமதி. கெங்கா ஸ்ரான்லி ஆகிய இருவரும் மனிதநேயப்பணி என்னும் தலைப்பிலும் திருமதி. மீனா சிவலிங்கம், கீத்தா பரமானந்தன் ஆகிய இருவரும் இலக்கியப் பணி என்னும் தலைப்பிலும் தமது சொல்லாடலை நடத்தினர். பாடல்கள் வரிசையில் Weeze என்னும் இடத்தைச் சேர்ந்த செல்வன். ராம் பரமானந்தன், Haltern என்னும் இடத்தைச் சேர்ந்த சேர்ந்த சகோதரர்களான செல்வி. அபிரா பத்மநாதன், செல்வி ஆரபி பத்மநாதன் ஆகியோரின் குழுப் பாடல் ஆகியன இடம்பெற்றன. நாடக வரிசையில் திரு.புத்திசிகாமணி, திருமதி. அமலா கபிலன் ஆகிய இருவரும் இணைந்து நடத்திய நாடகமும், திருமதி.சிவதர்சினி பிராங்ளின் அவர்களின் உருவாக்க இயக்கத்தில், திரு.பிராங்ளின் தாசையா அவர்களின் தொழில் நுட்பத்துடன் மண் சஞ்சிகையின் வாசகர்கள் இணைந்து நடித்த "புதிய அன்புடைமை" என்னும் நாடகமும் பலரின் மனதைத் தொடுவதாக அமைந்திருந்ததுடன் பாராட்டுக்குரியதாகவும் அமைந்தது. மனிதனும் மிருகமும் என்னும் தலைப்பில் சோஸ்ற் தமிழ்க் கல்வி கலாசார அமைப்பின் அதிபர் திருமதி. இந்து தெய்வேந்திரம் அவர்களின் உருவாக்கத்தில் இளையோர் வில்லிசை வழங்கினார்கள். இதனைவிட மண் சஞ்சிகையால் 25 வருட நிறைவை முன்னிட்டு நடாத்திய போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெற்றவர்களின் வாய்மொழி நிகழ்ச்சிகளும் நடந்தன. திரு.சிவனடியார் சிறீபதி மாயாஜால நிகழ்வினை நடத்தி சபையோரை மகிழ்வித்தார். இன்னும் ஐரோப்பிய தமிழ்வானொலியின் அதிபர் திரு ரவீந்திரன், மொழிபெயர்ப்பாளர் திரு ரகுநாதன் ஆகியோரும் மண்ணின் பணிகளை எடுத்துக்கூறியதுடன் ஆசிரியர் தம்பதிகளுக்குப் பொன்னாடைபோர்த்தி வாழ்த்தி மகிழ்ந்தனர். இந்நிகழ்வில் சிறுவர்சிறப்பு மலர், மண் சஞ்சிகையின் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் ஆகிய இரு நூல்கள் வெளியீடு செய்யப்பட்டன. சிறுவர் சிறப்பு மலரின் வெளியீட்டுரையினை எழுத்தாளரும் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளருமான பொன். புத்திசிகாமணி அவர்கள் நடத்த , வெள்ளிவிழாச் சிறப்பு மலரின் வெளியீட்டுரையினை யேர்மன் த.க.சேவையின் தலைவர் திரு.பொ.சிறீஜீவகன் அவர்கள் நடத்த, இரு மலர்களையும் திரு. சிவனடியான் சிறீபதி (இரங்கும் இல்லம் ஸ்தாபகர்) வெளியீடு செய்தார்.

இவ்விழாவிலே முக்கிய அம்சமாகவும் மண்சஞ்சிகை ஆசிரியரின் உள்ளக்கிடக்கையின் பிரதிபலிப்பாகவும் கௌரவிப்பு நிகழ்வுகள் பல பிரிவுகளாக இடம்பெற்றன. மண் சஞ்சிகைக்கு கடந்த 25 வருடங்களாக எழுதிவரும் கவிஞர் திரு ப.பசுபதிராசா அவர்களை ஆசிரியர் வ.சிவராசா அவர்கள் ‼தமிழ்த்தென்றல்" என்னும் பட்டம்வழங்கி பொன்னாடைபோர்த்தி பூமாலை அணிவித்துக் கௌரவித்தார். பல ஆண்டுகளாக எழுதிவரும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் பொன்னாடை போர்த்தி பூமாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். இவை மட்டுமல்லாது ஆதரவற்றோர் நிதிக்கு நீண்டகாலமாக நிதிஉதவிபுவரிபவர்கள், ஜேர்மனியில் பல ஆண்டுகளாக ஊடகப்பணியாற்றுபவர்கள், பொதுச் சேவையாளர்கள், மண்ணின் மீது அக்கறைகொண்டு வளர்த்தெடுக்கப்பாடுபட்டவர்கள், கலைஞர்கள் மாணவர்கள் யாவரும் கௌரவிக்கப்பட்டமை ஓர் மாபெரும் பாராட்டுவிழாவாக அமைந்தது எனவும் கூறலாம். கலை, இலக்கிய, எழுத்துப்பணிகள் மட்டுமல்லாது தாயகத்திற்கு உதவும் பணிகளை மேற்கொண்டுவரும் மண்ணின் வளர்ச்சிக்கு வாசகர்கள், எழுத்தாளர்கள், நலன்விரும்பிகளின் தொடர் பணிகளும் ஒத்துழைப்புக்களும் பக்கபலமாக இருந்துவருவது பாராட்டத்தக்க விடயமாகும். மிகச்சிறப்பாக நடைபெற்ற இவ்விழா நன்றியுரையுடன் இரவு பத்துமணிக்கு முடிவடைந்தது. இவ்விழா, மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதர்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தொடரும் பணி இனிதே தொடர வாழ்த்துக்களுடன்

கௌசி (மண்ணின் எழுத்தாளர், வாசகர்)
சோலிங்கன் ஜேர்மனி.

## நன்றி பகர்கிறோம்

மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா சென்றமாதம் 02.05.2015 அன்று சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற சகல வழிகளிலும் ஒத்துழைப்புக்களை நல்கிய வாசகர்கள், எழுத்தாளர்கள, மாணவமணிகள், பெற்றோர்கள், மன்றங்கள், வியாபார தாபனங்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மண் சஞ்சிகையின் கடந்த 25 ஆண்டுகால வளர்ச்சிப் பணியில் தாயகத்தின் துயர்துடைப்பிலும் எம்மோடு பங்குகொண்டு கரங் கொடுத்துவரும் நல்லுள்ளங்களுக்கும் இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்

ஆசிரியர்.

## மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா அரங்கினில்(நேரமின்மையால் ) வாசிக்கப்படாத கவிதை...

### யாசகமா? வேண்டுதலா ?

அகரத்தால் உலகாளும் அன்னைத்தமிழே தாயே வணக்கம்
அரங்கிலெனை அழைத்தவந்து அழகுபார்த்தவர்க்கும் வணக்கம்
மகரந்தம் மண்ணில்தூவும் மாலையிலே என் மண்ணின் வாசம்
மன்றத்திலே அமர்ந்திருக்கும் அனைவருக்கும் இவனின் வணக்கம்
சிகரங்கள் தொட்டுவிட்டகவிகள் சிம்மாசனத்திலிங்கு அமர்ந்திருக்க
சிறியேனை அழைத்துவந்து சின்னக்கவியேனும் படித்திடென்றார்..

கவியுரைக்கு அழைத்தவரோ காலதாமதமாகி வருவதனால் -எனை
கையோடு அழைத்துவந்து கவிபாடு என்று கட்டளையிடுகின்றார்
சரி..சரி என்றுசொல்லி சடுதியிலே இங்கே வந்துவிட்டேன்
சதிவேலை இதுதானோ என்று சிறு சந்தேகமும் மனதிலுண்டு
விதி இதுதானோ என்று விளக்கம் கேட்காமல் வந்தேன் -மண்
சகியினைப் பாடுவதற்கு நான் சம்பளமா கேட்கப்போகிறேன் -என்
சதியின் முன்னிலையில் பாடுவதற்கு சற்று சங்கடமாகவேயிருக்கிறது
கதியென்று அவளிடத்தில்தானே வீட்டில்நான் கைகட்டிநிற்கவேண்டும்...

மேடைகளில் நீண்டநாள் சகவாசம் எனக்கில்லை
மெதுவாக எழதிப்படிக்க அவகாசமும் தரவில்லை
வாடையில் வதங்கிய வண்ணாத்துப் பூச்சியினைப்போல்
வந்துவிட்டேன் உங்கள் முன் வணக்கங்கள் கூறியபடி
ஓடையின் சலசலப்பு இவன் கவியில் இருக்காது
ஒருமணிநேரத்துக்கு இந்த அறுவையும் நீடிக்காது
மேடையின் நாகரீகத்தை மெதுவாகக் கடைப்பிடித்து
மெல்லவரும் பூந்தென்றலுடன் மெல்லியலாளைப் பாடுகின்றேன்
ஜாடையில் அவளில்கொண்ட மையலின் விளைவினால்தான்
படியேறிவந்துவிட்டேன் அதனால்தான் பதற்றமான இந்தநிலை

மண்மகளைப் பாடு என்றார் மறுப்பதற்கு மனம்வரவில்லை
பெண்களைப் பாடு என்றால் பிரியப்படாத கவிஞர்களில்லை -என்
மண்மகளைப் பாடுவதனால் என்மகிழ்ச்சிக்கு அளவு இல்லை

மடைதிறந்த வெள்ளமென மருவிடும் கவிக்கு கரைகளில்லை
தண்ணொளியாய்த் தவழ்ந்துவந்து தளிர்நடைபயின்ற முல்லை
பண்வழியாய்ப் புகுந்ததனால் என்பாடல்களுக்கும் அளவு இல்லை
எண்களிலே இவள்வயது இருபத்தாறை எட்டும்நிலை -என்றாலும்
கன்னித்தமிழோடு கலந்ததனால் இக்காரிகைக்கு வயதே இல்லை
பண்ணிடும் பணிகளோ இப்பாரினுக்கு முழுதாயின்னும் தெரியவில்லை
பண்பாடு தமிழ்க்கலாச்சாரம் மனிதமுமே இப்பாவையில் உச்ச எல்லை

அண்ணல்காந்தி போதனையாய் அவளிடத்தில் அதிகம் கற்றேன்
அன்னையின் பரிவினையும் அவளிடத்தே தொடர்ந்து பெற்றேன்
உண்ணத்தான் தமிழமுதை உருவாக்கியே தந்துநின்றாள்
உதவுகின்ற கரங்களையே உறவாக்கிக் கொள் என்றாள்
எண்ணிக்கையை எந்நாளும் இரட்டிப்பாக்கு என்றுரைப்பாள்
இரக்கமுள்ள இதயங்களை இணைத்துக்கொள் என்றுசொல்வாள்...

மண்மகளின் வாசத்தில் மயங்கியவருள் இம்மானிடனும் ஒருவன்
மறைமுகமாய் நுகர்ந்தவற்றை இம்மன்றத்திலே உரைக்கின்றேன்
பண்ணைப்போல் பாவலரின்குரலில் வடியும் கானமழைபோல்
வண்ணத்தில் உடையுடுத்தி வந்திடுவாள் என் வாசல்வரை...
எண்ணத்தை எழிலாக என்னிடத்தில் எப்போதும் உரைத்திடுவாள்
எழதியதை உலகின் காதுகளுக்கு எப்படியும் சேர்த்திடென்பாள்

கண்ணைப்போல் தமிழ்க் கலாச்சாரத்தைக் காத்தபடி வந்திடுவாள்
கலைகளையும் கவிகளையும் களிப்போடு எனக்கும் தந்திடுவாள்
பெண்மகளாய் இம்மண்ணில் பிறந்துவந்து பேரெடுத்து மிளிர்வதற்கு
பிதாமகனாம் சிவராஜாவின் பேறென்றே நான் உரைப்பேன்...

மண்மகளோ மறுபடியும் கண்கூச வந்தென்முன் நின்றாள்
மகிழ்வுதரும் சேதிகளை மறந்திடாமல் வரைந்திடென்றாள்
கிண்ணத்தின் தேனுண்டு கிறங்கியதைப்போல் -எனக்கு
கீழிருந்து தலைவரைக்கும் கிளர்ச்சியினை ஊட்டிநின்றாள்

அண்ணல்காந்தி போதனையாய் அவளிடத்தில் அதிகம் கற்றேன்
அன்னையின் பரிவினையும் அவளித்தே தொடர்ந்து பெற்றேன்
உண்ணத்தான் தமிழமுதை உருவாக்கியே தந்துநின்றாள்

உதவுகின்ற கரங்களையே உறவாக்கிக் கொள் என்றாள்
எண்ணிக்கையை எந்நாளும் இரட்டிப்பாக்கு என்றுரைப்பாள்
இரக்கமுள்ள இதயங்களை இணைத்துக்கொள் என்றுசொல்வாள்...

கண்ணாடி வாழ்க்கையின் கவர்ச்சியிலே நீயும் மயங்கிடாது
கஞ்சிக்கும் இல்லாதவர்களை கணப்பொழுதேனும் நினைத்திடென்பாள்
திண்டாடும் தேசத்தில் திக்குத்திசையறியாத உறவுகளுக்கு
தீவனத்துக்கு ஒருபொழுதேனும் திட்டமிட்டு சேர்த்திடச்சொன்னாள்
வண்ணத்துப்பூச்சிகளாக வானில் சிறகடிக்கும் வயதுகளில்
வருந்துகின்ற சிறார்களுக்கு புதுவழிகாட்டிட உதவு என்றாள்
கொண்டாடி மகிழுகின்ற கொள்ளைப்பணத்தில் ஒருபகுதியை
கூழுக்கும் இல்லாதவர்க்கு கொடுத்துதவி செய்திடென்றாள்

கண்களிலே தூசிவிழுந்தால் கலங்கிநிற்கும் மானிடனே பசியால்
கதறியழும் குழந்தைகளைக் காப்பதற்கு நீ உதவிடென்றாள்
விண்ணேறிப் பயணிக்கும் விமானச்செலவில் சிறிதையேனும்
விழியிழந்த குழந்தைகளுக்கு விட்டுச்செல்ல வேண்டிநின்றாள்
மண்ணைவிட்டு வந்தவர்கள் வேரை மறந்திங்கே வாழ்ந்திடாது
மரணத்தின் வாயிலில் நிற்பவரை மறந்திடாது உதவச்சொன்னாள்
உண்பதற்கே உணவின்றி உருக்குலையும் உறவுகளுக்கு உன்
உல்லாசச்செலவில் ஒருதுளியை ஒதுக்கிதர வேண்டிநின்றாள்..

வெண்கொற்றக் குடையின்கீழ் வீற்றிருந்த மண்மகளோ
விடைபெற்றுச்செல்லுமுன் விரல்காட்டி எனை அருகழைத்தாள்
மண்மகள் உரைத்தவற்றால் மருண்டுபோய் நான்நின்றேன்
மறக்காமல் அடிக்குறிப்பாய் இதை மன்றத்தில் செப்பிடென்றாள்
திண்ணமாய்ச் சிவராசா குடும்பத்தை சிரம்தாழ்த்தி வணங்கிடென்றாள்
சிவனடியான் சிறீபதியையும் சிறப்போடு வாழ்த்திவிடு என்றாள்
உண்மையன்பில் சிறுவர் நிதிக்கு உதவுகின்ற உறவுகளுக்கு
உரிமையில் என்சிறப்புவணக்கத்தை உரைக்க மறக்காதேயென்றாள்
பண்ணாத அறப்பணிகளில் யாவரையும் பங்குபற்ற அழைத்திடென்றாள்
பணிவோடு இதைப் பாவாகவடித்து இப்பாரினுக்கு உரைத்திடென்றாள்
கண்மூடித்திறப்பதற்குள் அந்தக்காரிகையோ சிட்டாய் பறந்துபோனாள்
காட்சிமயக்கமோ அல்லது கனவுதானோ என்றுநான் கலங்கிநின்றேனங்கு...

முத்தத்தால் என் தாயின் மூச்சாக முகிழ்ந்த கவி
முகில்வாணனின் மேடைகளில் முதிர்ந்திட முயன்ற கவி
இரத்தத்தில் என்தந்தை எழுதிவைத்த இளைய கவி
இணையங்களில் இரதமாக ஏறிவரும் இவனின் கவி
சித்தத்தில் சிறகடித்து சீறிவரும் செந்தமிழாளின் கவி
சிறப்பாக மண்மகளால் செளித்துவந்த சின்னக்கவி
மொத்தத்தில் வேண்டுகோளாய் முன்வைத்த செய்திகளோ
முற்றாக உங்கள் மனதுக்குள் பதியமானால் மோட்சம்பெறும்..!

அம்பலவன்புவனேந்திரன்.

## மண்சஞ்சிகையின்வெள்ளிவிழா வாசகர் போட்டிமுடிவுகள்

சிறுகதைப்போட்டி:-

1வது பரிசு- "காயங்கள் மாறும்" திருமதி கீதா பரமானந்தன் - Kevalaer
2வது பரிசு- "கண்ணாடி வாழ்க்கை" திருமதி மீரா குகன் - Meerbusch
3வது பரிசு:- "தங்கத்தாயகம்" திருமதி கலைவாணி ஏகானந்தராசா - Weeze
:- "சுதந்திரப்பறவைகள்" திருமதி வசந்தா ஜெகதீசன் - Geilenkirchen
(பங்குபற்றிய போட்டியாளர்கள் - 25 பேர்)

கவிதைப்போட்டி:-

1வது பரிசு:- "வறுமையைப்புதை..வாழ்வை விதை" திருமதி.வசந்தா ஜெகதீசன் - Geilenkirchen
2வது பரிசு:- "மதமில்லா இறைவன்" திரு.ஜெயம் தங்கராசா - Netherland
:- "ஏழைகள்" திருமதி கெங்கா ஸ்ரான்லி - Elfstadt
3வது பரிசு:- "மலாலா என்னும் மருந்து" திரு ப.பசுபதிராசா - Wuppertal
(பங்குபற்றிய போட்டியாளர்கள் - 32 பேர்)

கட்டுரைப்போட்டி:-

1வது பரிசு:- "கணனி உலகம்" ஏ.ஜே ஞானேந்திரன் - Swissland
2வது பரிசு:- "தமிழ்ப்பெண்களின் இன்றையநிலை"-திருமதி சிவகாமசுந்தரி கணேசநாதன் - Goslar
:- "தவத்திரு தனிநாயகம் அடிகளார்" -திருமதி ஜெயா நடேசன்- - Havixberg
3வது பரிசு:-'புலம்பெயர் வாழ்வியல்"-திருமதி மீனா சிவலிங்கம் - Hennef
:-"தவத்திரு தனிநாயகம் அடிகளார்"-திரு கதிர்பரமலிங்கம் -Weeze
(பங்குபற்றிய போட்டியாளர்கள் - 23 பேர்)

மண்
கலை, இலக்கிய, சமூக இருமாத இதழ்
„MANN" (ERDE) e.V. Duisburg - Deutschland
„MANN" (ERDE) Tamilisches Magazin
für Kultur, Literatur und Soziales

## வியாபார வள்ளல்களுக்கு நன்றிகள்...

மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா 02-05-2015 சனிக்கிழமை அன்று சிறப்புற நடபெற நிதியுதவி புரிந்த வர்த்தகப் பெருமக்களுக்கு எமது பெரு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். வியாபாரமும் பெருக வேண்டும், நம் மொழியும் உலகெல்லாம் பரவவேண்டும் என வாழ்த்துகிறோம்!...

| | | | |
|---|---|---|---|
| 01. | VTM Minimarket (Oberhausen) | - Duisburg | 200-00 |
| 02. | Tropical Foods | - Duisburg | 50-00 |
| 03. | Asia Market (Kumar) | - Duisburg | 100-00 |
| 04. | Lukas Asia Market (Thas) | - Duisburg | 100-00 |
| 05. | Yarl Supper Market | - Duisburg | 50-00 |
| 06. | Gothab Finance+BCN Travals | - Dotmund | 150-00 |
| 07. | Orientalisch Textilen & Schmuck | - Dortmund | 100-00 |
| 08. | Thooya Communication | - Dotmund | 50-00 |
| 09. | Om Namaste Restaurant | - Dortmund | 50-00 |
| 10. | Adsaya Mideia | - Dortmund | 100-00 |
| 11. | Kailas Fisch - Feinkost | - Dortmund | 25-00 |
| 12. | Kerven GmbH (Chitram TV) | - Germany | 200-00 |
| 13. | Mülder Bäckerei Konditorei | - Köln | 150-00 |
| 14. | Lyca Mobile | - Germany | 200-00 |
| 15. | TTS Brothers | - Oberhausen | 50-00 |
| | | Total | 1575-00 |

இத்தொகை 1575-00 யூரோக்களும் விழா வரவு-செலவுக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.

16. Bavan (Annachchi) Textilen - Mülheim

இத்தாபனம் அதிஸ்டலாபச் சீட்டுக்கான 1வது 3வது பரிசுப்பொருட்களைத்தந்து உதவியமைக்கு நன்றிகள்.

ஆசிரியர்

# அதிஸ்டலாபச் சீட்டு விற்பனை வரவுகள்...

மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா நிதிக்காக அதிஸ்டலாபச் சீட்டுக்களை விற்பனைசெய்து நிதி சேகரித்து அனுப்பிவைத்த வாசகப்பெருமக்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

| | | Euro |
|---|---|---|
| 01-திருமதி கலா மகேந்திரம் | - Obrehausen | - 40-00 |
| 02-திரு க குமரன் | - Mönchengladbach | - 40-00 |
| 03-திருமதி இந்து தெய்வேந்திரம் | - Soest | - 40-00 |
| 04-திருமதி சக்தி சிறீனிசங்கர் | - Mönchengladbach | - 40-00 |
| 05-திருமதி கலா பத்மநாதன் | - Haltern | - 40-00 |
| 06-திருமதி வேணி கிருபாகரன் | - Oldeburg | - 40-00 |
| 07-திருமதி செந்தில்செல்வி சிவா | - Bitwig | - 40-00 |
| 08-திருமதி விஜயகுமார் | - Stuttgart | - 40-00 |
| 09-திரு அ குமாரகுலசிங்கம் | - Munster | - 40-00 |
| 10-திரு எஸ் அருணன் | - Buxtehude | - 40-00 |
| 11-திருமதி புஸ்பாகரன் | - Heppenheim | - 40-00 |
| 12-திரு ரி தேவானந்தராசா | - Mönchengladbach | - 30-00 |
| 13-திருமதி சிவகாமசுந்தரி | - Goslar | - 22-00 |
| 14-திருமதி கீத்தா பரமானந்தன் | - Kevalaer | - 20-00 |
| 15-திரு பி சுதாகரன் | - Straelan | - 20-00 |
| 16-திரு பி ஜெயரூபலிங்கம் | - Bremavorde | - 20-00 |
| 17-திரு ந ஜெயக்குமார் | - Aldenhöven | - 14-00 |
| 18-திரு ந சண்முகரத்தினம் | - Weeze | - 10-00 |
| | மொத்தம் | - 576-00 |

02-05-2015 விழாவில் விற்பனை செய்யப்பட்ட சீட்டுக்கள் வரவு - 110-00
(கலா.மகேந்திரம் 50-00 + சுலோசனா புவனேந்திரன் 60-00)

முழு மொத்தம் 686-00

இப்பணம் மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா வரவு – செலவுக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

# அன்பளிப்புகள்...

## (வாசகர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள்)

வெள்ளிவிழா சிறப்புறநடைபெற நிதி உதவி புரிந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் இதயம்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

| | | |
|---|---|---|
| 01-திருமதி இராஜேஸ்வரி சிவராசா | - Duisburg | - 100-00 |
| 02-திருமதி சிவதர்சினி பிராங்ளின் சிவராசா | - Duisburg | - 100-00 |
| 03-திருமதி றோகினி இரத்தினசிங்கம் | - Duisburg | - 100-00 |
| 04-திருமதி சுபேந்தி வசந்தன் | - Duisburg | - 100-00 |
| 05-திரு ஐ ரகுநாதன்(மொழிபெயர்ப்பாளர்) | - Mulheim | - 100-00 |
| 06-திரு எஸ் பிறேம் | - Siegen | - 100-00 |
| 07-செல்வன் பிரணவன் யோகராசா | - Dusseldorf | - 100-00 |
| 08-திரு பொ சிறீஜீவகன் | - Kamen | - 75-00 |
| 09-அறிவுப்பூங்கா தமிழ்ப்பாடசாலை மாணவர்களள | - Stuttgart | - 60-00 |
| 10-திரு அம்பலவன் புவனேந்திரன் | - Oberhausen | - 50-00 |
| 11-திருமதி றஞ்சனா தவராசா | - Wadgassen | - 50-00 |
| 12-திருமதி மேரி எலிசபெத் நோபேட் | - Arnsberg | - 50-00 |
| 13-திருமதி விவேகானந்தன் | - Swiss | - 50-00 |
| 14-திரு பொன் புத்திசிகாமணி | - Sundern | - 50-00 |
| 15-திருமதி புனிதமலர் இராஜெஸ்வரன் | - Nürenberg | - 50-00 |
| 16-திருமதி சாந்தினி துரையரங்கன் | - Essen | - 50-00 |
| 17-திரு சோம சிவ குலநாயகம் | - Bremen | - 50-00 |
| 18-திருமதி வசந்தா ஜெகதீசன் | - Geilenkirchen | - 50-00 |
| 19-திருமதி புஸ்பா அருமைத்தரை | - Weisloch | - 50-00 |
| 20-செல்வன் நிகேஸ் சயந்தன் (கிரி) | - London | - 50-00 |
| 21-திருமதி கலைவாணி ஏகானந்தராசா | - Weeze | - 35-00 |
| 22-திருமதி கெங்கா ஸ்ரான்லி | - Elfstadt | - 35-00 |
| 23-திருமதி கீதா பரமானந்தன் | - Kevalaer | - 30-00 |
| 24-திரு அன்ரனி வரதன் | - Dusseldorf | - 30-00 |
| 25-திரு பொ மகாலிங்கம் | - Oberhausen | - 30-00 |
| 26-செல்வி ஜமீரா கணேசலிங்கம் | - Wickerde | - 25-00 |
| 27-திருமதி கௌசி சிவபாலன் | - Solingen | - 25-00 |
| 28-திரு ஜெயம் தங்கராசா | - Holland | - 25-00 |
| 29-திரு.எஸ் சிவலிங்கம்ராஜா | - Bunde | - 25-00 |
| 30-திரு கி அற்புதராசா | - Soest | - 25-00 |
| | | -------- |
| | | 1670-00 |

அடுத்த பக்கம் தொடர்ச்சி..........

| | | |
|---|---|---|
| முற்பக்கத் தொடர்ச்சி | | - 1670-00 |
| 31-திரு க பொன்னுத்துரை | - Hanover | - 25-00 |
| 32-திரு சு விக்னேஸ்வரன் | - Essen | - 25-00 |
| 33-திரு ப பசுபதிராசா | - Wuppertal | - 25-00 |
| 34-திரு கோ கபிலன் | - Arnsberg | - 25-00 |
| 35-திருமதி மீனா சிவலிங்கம் | - Hennef | - 25-00 |
| 36-திருமதி சக்தி சிறீனிசங்கர் | - Mönchengladbach | - 25-00 |
| 37-திருமதி ஜெயா நடேசன் | - Havixberg | - 20-00 |
| 38-திருமதி தவமலர் கல்விராசன் | - Gelsenkirchen | - 20-00 |
| 39-திரு சி நவரத்தினம் | - Franfurt | - 20-00 |
| 40-திரு புவி புவேந்திரன் | - Bonn | - 20-00 |
| 41-திரு சு பாக்கியநாதன் | - Dortmund | - 20-00 |
| 42-திருமதி நகுலா சிவநாதன் | - Selm | - 15-00 |
| 43-செல்வன் ராகுல் கனகராசா | - Mönchengladbach | - 10-00 |
| | மொத்தம் | 1945-00 |

## மொத்த வரவுகள்

| | |
|---|---|
| - வாசகர்கள் மாணவர்கள் நலன்விரும்பிகள் | - 1945-00 |
| - வியாபார நிறுவனங்கள் | - 1575-00 |
| - அதிஸ்டலாபச்சீட்டு வரவுகள் | - 686-00 |
| - சிறப்பு மலர்கள் விற்பனைவரவு | - 370-00 |
| - தேநீர்சாலை அன்பளிப்பு வரவு | - 200-00 |
| முழுமொத்த வரவு | 4776-00 |

# செலவுகள்

| | |
|---|---|
| -வீடியோ ஒளி, ஒலி, எயர்மைக் | - 540-00 |
| -விழா மண்டப வாடகை | - 613-50 |
| -சிறப்புமலர், சிறுவர் சிறப்புமலர் அச்சிட்டசெலவு | - 1200-24 |
| -வெற்றிக்கிண்ணங்கள், கண்ணாடி விருதுகள் | - 375-00 |
| -பொன்னாடைகள் | - 100-00 |
| -விழா விளம்பர அட்டைகள் (300) அச்சிட்டசெலவு | - 65-00 |
| -விழாவின் போட்டிகள் விளம்பரம் அச்சிட்ட செலவு (புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி) | - 80-00 |
| -தபால் முத்திரைச் செலவு (ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை) | - 120-00 |
| -கணனி மைச்செலவு கறுப்பு 29-99 + கலர் 39-99 | - 69-98 |
| -10வருடங்களுக்குமேல் கணனிஅச்சு, அட்டைப்படஅமைப்பு 4 பேர் விழாவில் பரிசு (Media Markt Gutschein) | - 200-00 |
| -போட்டோகொப்பி கலர் பேப்பர் (Aldi) | - 22-00 |
| -அதிஸ்டலாபச்சீடு 2வது பரிசுப்பொருள் (Kodi Markt) | - 69-95 |
| -அதிஸ்டலாபச்சீடு ஆறுதல்பரிசுகள்5 (KaufHof Markt) | - 50-00 |
| -சிறுவர் பெரியோர் பரிசுப்பொருட்கள் (WoolWorth Markt) | - 140-36 |
| -மேடை அலங்காரச் செலவுகள் | - 21-77 |
| -வெற்றிக்கிண்ணங்கள் விருதுகள் பெயர்,போட்டி விபரங்கள் பொறித்த பேப்பர், கலர் மற்றும் சிறுசெலவுகள் (புவி) | - 130-42 |
| -பரிசுப்பொருட்கள் (Tedi Markt) | - 57-75 |
| -நாடகம், மற்றும் கலை நிகழ்வுகள் பரிசுப்பொருட்கள் | - 102-00 |
| -பிரதம விருந்தினர்கள் பூக்கொத்து | - 12-00 |
| -றிபன்துணி, பிறிண்ட் பேப்பர் | - 30-00 |
| -சில்லறைச்சாமான்கள் | - 25-88 |
| மொத்தச் செலவுகள் | - 4025-85 |

| | |
|---|---|
| மொத்த வரவுகள் | + 4776-00 |
| மொத்தச் செலவுகள் | - 4025-85 |
| | -------- |
| | + 750-15 |

வவுனியா இந்து அன்பகம்,( 21 பிள்ளைகள்) வவுனியா அருளகம் (24 பிள்ளைகள் ) கிளிநொச்சி ரூத் மிஷன் (18 பிள்ளைகள்) ஆகிய இல்லங்களிலிருந்து மண் விழாப் போட்டிகளில் பங்குகொண்ட மாணவ மணிகளுக்குப் பரிசுகள் மற்றும் சிற்றுண்டிகள் வேண்டிக் கொடுப்பதற்காக ஒவ்வொரு இல்லத்திற்கும் தலா 100-00 யூரோக்கள் என 300-00 யூரோக்கள் அனுப்பி வைக்கப்படுகின்றது. - 300-00

--------

\+ 450-15

-மண்ணின் சிறப்புமலர் மற்றும் சிறுவர் சிறப்புமலர்கள் தாயகத்திற்கும் கனடா மற்றும் ஐரோப்பா நாடுகளிலிருந்து வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கு சிறப்புமலர்கள் அனுப்புவதற்கான முத்திரைச் செலவுக்காக - 100-00

-மண்ணின் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசில்கள் பெற்றுக்கொள்ளாத மாணவமணிகளுக்கு மண் சிறுவர் சிறப்புமலர் அனுப்புவதற்கான முத்திரைச் செலவாக - 100-00

\- 200-00

----------

இத் தொகை ஆதரவற்றோர் நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது + 250-15

----------

## நன்றிகள்:-

மண் சஞ்சிகையின் வெள்ளிவிழாவிற்கு நிதிசேகரிப்பில் எம்மோடு சேர்ந்து பங்காற்றிய ஜேர்மனி தமிழ் எழுத்தாளர்சங்க உறுப்பினர்களான திரு. அம்பலவன் புவனேந்திரன், திரு பொன் புத்திசிகாமணி, திரு பொன் சிறீஜீவகன் ஆகியோருக்கு எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகள்.

விழா சிறப்புற நிதிஉதவிகளை அள்ளிவழங்கிய அனைத்து உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் மாணவமணிகளுக்கும் பெரு நன்றிகள்....

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி - சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை - 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை - 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - மட்டக்களப்பு - 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - கிளிநொச்சி - 100-00 யூரோ
13. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00 யூரோ

# பிறந்தநாள் அன்பளிப்பு 250-00 யூரோ...


லண்டனில் வசிக்கும் எனது பெறாமகனின் பிள்ளைகளான (எனது பேத்திகள்) செல்விகள் தனுஷ்கா, தஷ்மிகா ஜனார்த்தனன் ஆகிய இருவரும் அண்மையில் தமது பிறந்தநாளை எளிமையாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்த நல்ல நாளையொட்டி தாயகத்தில் அல்லல்படும் ஆதரவற்ற பிள்ளைகளின் நிதிஉதவிக்காக மண் சஞ்சிகைக்கு 250-00 யூரோக்களை அனுப்பிப் பேருதவி புரிந்துள்ளனர்.

இந்த இரு சிறுமிகளும் பல்லாண்டுகாலம் பல செல்வங்களும்பெற்று வாழ நாமும் வாழ்த்துகிறோம். பெற்றோரான ஜனா-அனு தம்பதிகளின் மனிதநேயப்பணிக்கு மண் சஞ்சிகை நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

இச்சிறுமிகளின் முன்மாதிரியைப் பாராட்டும்வேளை நீங்களும் உங்கள் பிள்ளைச் செல்வங்களின் பிறந்தநாட்கள் கொண்டாடும்போது சிறுதொகைப்பணத்தை உதவினீர்களானால் தாயகத்தில் அல்லல்படும் சிறார்களின் கண்ணீரைத் துடைக்கலாம்.

"இன்றே செய்யுங்கள் அதை நன்றே செய்யுங்கள்"

ஆசிரியர்



# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 15.03.2015 +431-49

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 160-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி கலைவாணி ஏகானந்தராசா - Weeze + 30-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

07. செல்வி தனுஷ்கா, செல்விதஷ்மிகா ஜனார்த்தனன் - London + 250-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

08. திரு.தம்பிமுத்து மார்க்கண்டு - London + 100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

09. திரு வைரமுத்து நடராசா - London + 100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

10. திரு சத்தியசீலன் சத்தியகுமார் - Krefeld + 100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

----------

1431-49

மண் விழாவின் வரவு-செலவுபோக இலாபம் + 250-15

--------


+ 1681-64

+ 1681-64

அனுப்பியது: –

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அன்பகம் சிறுவர் இல்லம் - வவுனியா | | | - 600-00 | |
| 2. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் - வவுனியா | | | - 500-00 | |
| வங்கிக்கட்டணம் 2 x 35-00 | | | - 70-00 | |
| | | | ------- | |
| | | | - 1170-00 | |
| வங்கிவரி:- | ஜனவரி | - 12-38 | | |
| | பெப்ரவரி | - 15-08 | | |
| | மார்ச் | - 12-38 | | |
| | ஏப்ரல் | - 21-12 | | |
| | மே | - 16-42 | | |
| | | -------- | | |
| | | - 77-38 | - 77-38 | |
| | | | --------- | |
| | | | - 1247-38 | - 1247-38 |
| | | | | --------- |

31.05.2015 ல் மீதி கையிருப்பு + 434-26



# Ruth Mission

No.74, Jeyapuram North,
Kilinochchi

No: 062

12/03/2015

Received with Thanks the Sum of Rupees Seventy - thousend eight hundred and fourty eight Rs only

From Mr. V. Sivarajah

On Account of Donation

Rs: 70,848/-

G. J. Jayaratnam
Director/Manager

Siva Pathippakam,65, Kanagapuram, Kilinochchi.

உ
சிவமயம்



# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்
# SRI AGILANDESHWARY ARULAHAM

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில்
ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUVARAR THIRUKOVIL

Kovilkulam,
Vavuniya. Sri Lanka
T.P : 0094 024 - 2221685
E.mail: arulaham@gmail.com

"இளம் சிறார்களை கருணை உள்ளத்துடன் பாதுகாப்போமாக"
"May we protect tender hearted children with compassion"

கோவில்குளம்,
வவுனியா, இலங்கை.

Banker: Bank of Ceylon - Vavuniya. A/C No. 0002364895, Reg No. NEP/PCC/CH/125

போசகர்கள்
**Patrons**
Mr.K.Kanesh Govt.Agent Jaffna
Mr.A.Thiyagarasa, President,
(Nayinai Nagapoosani Amman Kovil)

கௌரவ தலைவர்
**Hony.President**
Mr.M.Sabanathan (Prop: Neem Rice Mill)

கௌரவ உப தலைவர்
**Hony.Vice President**
Mr.S.Ramamoorthy
(Prop: Thirusenthooran Rice Mill)

கௌரவ செயலாளர்
**Hony.Secretary**
Mr.A.Navaratnarajah Trustee
Arulmihu Agilandeshwary Sametha
Agilandesuvarar Thirukovil

கௌரவ உப செயலாளர்
**Hony. Asst.Secretary**
Mr.V.S.Thevarajah (Govt. Contractor)

கௌரவ பொருளாளர்
**Hony. Treasurer**
Mr.S.Annalingam (Prop: Kugan Motors)

நிர்வாக உறுப்பினர்கள்
**Commitee Members**
Mr.A.Umathevan (Prop: New Sun Rice Mill)
Mr.P.Murugaraj (Prop: Sellam Rice Mill)
Mr.S.Sripathynathan (Prop: Asokan Rice Mill)
Mr.N.Thanapalasingam (Trader)
Mr.S.Sureshkumar (Divisional Secretariat)
Mrs.T.Ramanathan

நிர்வாக அதிகாரி
**Administrator**
Mr.R.Loganathan (Accountant)

.........................201......

March 15,2014

திரு.வ.சிவராஜா அவர்கட்கு,

பிரதம ஆசிரியர், மண் சஞ்சிகை, ஜேர்மனி.

அன்பான வணக்கம்,

**சிறார்கள் பராமரிப்பிற்கான நிதி உதவி**

மேற்படி இல்லத்திலுள்ள சிறார்களில் நான்கு சிறுவர்களின் பராமரிப்பு செலவை ஏற்று தங்கள் சஞ்சிகை வாசகர்கள் இம்முறையும் தங்கள் மூலம் மது வங்கி கணக்கிலக்கத்திற்கு அனுப்பி வைத்த பணம் **102,062/-** (ஒரு லட்சத்துஇரண்டாயிரத்து அறுபத்து இரண்டு) நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

இத்துடன் பணத்திற்கான பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கின்றோம்.

இல்லத்திலுள்ள நான்கு சிறார்களான அபிராமி, தாட்சாயனி, சத்தியா, சாம்பவி அனைவரும் நலமாகவுள்ளனர். தங்களின் தொடர் உதவிக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, தாங்களும் பணம் அன்பளிப்பு செய்துள்ள அன்பர்களும் நலமாகவாழ அகிலாண்டேசுரப்பெருமான் அருள்புரிவாராக.

நன்றி

ஆ. நவரத்தினராசா.

(ஆ.நவரத்தினராசா)

செயலாளர்

# RUTH MISSION

Jeyapuram north,
Jeyapuram.

E-mail : g.jeyaratnam@ymail.com.
T.p : 0778380254./ 0213202588

13/03/2015

மதிப்புக்குரிய ஆசிரியர் சிவராஜா அவர்கட்கு,

அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவர் அருளால் இங்கு நாம் யாவரும் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறோம். உங்கள் சுகங்களுக்காக இறைவனிடம் மன்றாடுகிறோம்.

எமது இல்லப் பிள்ளைகளுக் அனுப்பிய பணம் 500 யூரோ - 70.848/= இலங்கைப் பணமாக கிடைத்தது. மிகவும் நன்றி. பிள்ளைகள் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். தற்போது 1ம் தவணை பரீட்சை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. பாடசாலையில் போதிய ஆசிரியர் இல்லாத படியால் பெரியவகுப்புப் பிள்ளைகள் 5 km. தூரத்திற்கு Tuitionக்கு பாடசாலை முடிந்ததும் அங்கு செல்கிறார்கள். (முழங்காவில், பூநகரி, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு போய் வருகிறார்கள்.

காலை 7.30. போகிறார்கள். மதியம் 2.00 மணிக்கு பாடசாலை முடிந்ததும், நான் சாப்பாடு அனுப்புவேன் (watcherடம்) சாப்பிட்டு அங்கிருந்து Bus பிடித்து போவார்கள். பின்பு மாலை 7.00 க்கு தான் வீட்டுக்கு வருவார்கள். முக்கியமாக 10, 11, 12, ஆகிய வகுப்புகள். பிள்ளைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இம்முறை Augustக்கு 19 பிள்ளைகள் A/L. 16 பேர் December. O/L. பரீட்சை எடுக்க இருக்கிறார்கள்.

பிள்ளைகள் படிப்புக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆண்டவர் தான் கிருபையாக பெலன், தைரியம், நம்பிக்கை கொடுக்க வேண்டும். எல்லாம் ஆண்டவர் கரத்தில் தான் ஒப்படைத்து இப்பணியை நடத்துகிறேன். எமக்காக மன்றாடுங்கள்.


இத்துடன் இல்ல அக்கவுண்ட்களும், பணத்துக்குரிய பற்றுச்சீட்டும் அனுப்பிவைக்கிறேன்.

நன்றி.

Sis.G.J.Jeyaratnam
Ruth Mission
Jeyapuram, Kilinochchi.
Sri Lanka.

இங்ஙனம்
அன்பு சகோதரி,
Gladys. Jeyaratnam.

# 75 வது பிறந்தநாள் வாழ்த்து...



தமிழினம் பற்றிய புரிதலோடும், தமிழ் நிலம் பற்றிய தெளிதலோடும் ஈழத்தவர்களின்உரிமைக்குரலாக, உண்மைக்குரலாக ஆசிய பிராந்தியம் கடந்து சர்வதேச விவகாரம்வரை கர்ஜித்துவரும் வணக்கத்துக்குரிய மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்கள் (16.04.2015) தனது 75வது அகவையுற்றார். மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்கள், சிறீலங்கா அரச படைகளின் நிலஆக்கிரமிப்பு போரில் நிகழ்த்தப்பட்டுள்ள இறப்புகளின் (படுகொலைகள்) எண்ணிக்கையை, "பரிகார நீதியையும் தீர்வையும் தரவேண்டிய ஐக்கிய நாடுகள் சபையே" நாற்பதாயிரம் என்று குறைத்து மதிப்பிட்டபோது, இத்தனைக்கும் சிறீலங்காவின் கொலைக்களத்துக்குள் இருந்துகொண்டு "ஒரு இலட்சத்துஐம்பதாயிரத்துக்கும் அதிகமானோர்" கொல்லப்பட்டுள்ளனர் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர் என்று மெய்யுரைத்து சர்வதேசத்தின் கூட்டுச்சதியின் குட்டைஉடைத்த விடுதலைப்பசியாளன்! கனன்று கொண்டிருக்கும் இலட்சிய நெருப்பு ஆவார்!

அநீதிகளுக்கு எதிராக கோபத்தீயை மூட்டுகின்ற, நல்லிணக்கம், சாந்தி, சமாதானம்,கூடிவாழ்தல், பகிர்ந்துண்ணல் பற்றி சகல சமுகங்களுக்கும் போதிக்கின்ற மனிதநேயபண்பாளனை,வடக்கு கிழக்கில் செயல்பாட்டு வலையமைப்பைக்கொண்டுள்ள, பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள், சிவில் சமுக மனித உரிமை செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், முன்னாள் போராளிகள், சமுக ஆர்வலர்கள் உறுப்புரிமை பெறும், மக்கள் ஆட்சிஅரசியலுக்கான உந்துசக்தி இயக்கமாகிய "நாங்கள்" இயக்கமும் வாழ்த்திபேருவகையுறுகிறது. மண்ணின் வாசகர்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்...








# மண் வெள்ளிவிழா






















WISSEN, KULTUR & LITERATUR
ZWEIMONATIGE AUSGABE
HTTP://WWW.MANN-ERDE.COM

# ERDE Mann

2015
GERMANY
AUSGABE 171









| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |